# வீணை, தபேலா

# அரங்கப்பிரவேசம்

**19.05.2024**

செல்வி.தீக்ஷனா உமாகாந்தனின் வீணை

செல்வன்.மயூரன் ஆரணனின் தபேலா



**நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மற்றும் "சோமராகம்" இசைமன்ற மாணவியும்,
திரு. திருமதி. உமாகாந்தன் குமுதா தம்பதிகளின் கலைப்புதல்வியுமாகிய
செல்வி. தீக்ஷனா உமாகாந்தனின் வீணை

மற்றும்

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கலாவித்தகர் திரு. கனகசபை சிவகுமார்
அவர்களின் மாணவனும் திரு. திருமதி. மயூரன் யாழினி தம்பதிகளின்
தலைப்புதல்வனுமாகிய
செல்வன் மயூரன் ஆரணனின் தபேலா

இரண்டும் இணைந்த

# "அரங்கப்பிரவேசம்"

தலைமை

**திரு. குமரேசன் புரந்தரன் அவர்கள்**
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

பிரதம விருந்தினர்

**கலாநிதி. திரு. தாமோதரம்பிள்ளை சனாதனன் அவர்கள்**
(காண்பியக் கலைஞர் இருக்கைப் பேராசிரியர்-கலை வரலாறு
நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை

**ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த ப்ரமாச்சாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம்)

ஆசியுரை

**ப்ரம்மஸ்ரீ கனக கிருஷ்ணநாதக்குருக்கள் அவர்கள்**
(அரங்க பூஜா குரு)

சிறப்பு விருந்தினர்கள்

**திரு. வி.எஸ்.பி.துசீதரன் அவர்கள்**
(அதிபர். யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரி)

**திருமதி துஷ்யந்தி துசீதரன் அவர்கள்**
(அதிபர். யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

மதிப்பீட்டுரை

**கலாநிதி. திருமதி. சுகன்யா அரவிந்தன் அவர்கள்**
(முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன சுவாமிகளின் நல்லாசிச் செய்தி



அன்புடையீர்!

திரு.திருமதி. உமகாந்தன் குமுதா தம்பதிகளின் கலைப்புதல்வியுமாகிய செல்வி.தீக்ஷனா உமாகாந்தனின் வீணை மற்றும் செல்வன் மயூரன் ஆரணணின் தபேலா இணைந்த அரங்கேற்ற நிகழ்வு இடம் பெறுவதையிட்டு அகமகிழ்கின்றோம்.

கலைவாணியின் வாத்தியமான வீணையைத் திறம்பட இசைப்பதில் குமுதா உமாகாந்தன் விளங்குபவர். அவர் தன் கலையைத் தனது புதல்விக்கு முறையாகப் பயில்வித்து அரங்கேற்றம் காண்பது பெருமைக்குரியது. அடக்கமும் கலைத்திறனும் கொண்ட சிவகுமார் அவர்களிடம் தபேலாவைக் கற்று வித்தியாசமான அரங்காக இதனை ஆரணன் ஏற்படுத்தியுள்ளார்.

இளஞ்சிறார்கள் இருவரும் தத்தம் துறை சார்ந்த கலைகளில் மேன்மேலும் சிறந்தோங்கிக் கலைக்கும் எமது சமூகத்திற்கும் சேவை நல்கிப் பல உயர் நிலைகளை எய்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிராத்திக்கின்றோம். இவர்களுடன் அரங்கில் இணையும் அணியிசைக் கலைஞர்களையும் இந் நிகழ்வு சிறப்பாக நடைபெறவும் வாழ்த்தி இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ கனக கிருஷ்ணநாதக் குருக்களின் நல்லாசிச் செய்தி



மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நமது பாரம்பரிய மரபில் மாணவப்பருவத்தில் குரு மூலமாக பல்வேறு வித்தைகளை கற்கின்றோம். குருவின் கற்பித்தல், திறமை, அனுபவம், நெறிப்படுத்தல், பயிற்சி முதலானவைகளால் தான் மாணவன் கற்ற வித்தை பூரணமாகிறது.

கற்ற வித்தையை அறிஞர் முதலாக சபையினர் முன்பாக முதன் முதலில் முன்னிலைப்பாடுத்தி மேடை ஏற்றுவதே அரங்கேற்ற நிகழ்வாகும். இவ்வாறு ஆரம்பிக்கும் அரங்கேற்ற நிகழ்வு ஏற்றம் நிறைந்ததாகவே அமைகிறது.

செல்வி. தீக்ஷனா உமாகாந்தன் மற்றும், செல்வன் மயூரன் ஆராணன் ஆகிய இருவரதும் வீணை, தபேலா அரங்கேற்ற நிகழ்வானது ஆய கலைகள் அறுபத்து நான்கினதும் அதிபதி சரஸ்வதிதேவியின் திருவருளும், கற்பித்த குருவினர்களின் ஆசிகளும் சேர்ந்து சபையினரின் பாராட்டு மழையுடன் சிறப்புடன் இடம்பெறவும், இவர்களது இசைப்பயணம் இன்று முதல் அரங்கங்கள் பல கண்டு மென்மேலும் வளர எனது மனம் நிறைந்த நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ கனக கிருஷ்ணநாதக் குருக்கள்
முரசு மோட்டை,
பரந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வரின்
# ஆசிச் செய்தி



கலைகளைக் காப்பாற்றுதல் பெருங்கடனாகும். எமது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறையிடம் வளரத்து விட வேண்டியது கலைஞர்களின் சீரிய தொண்டாகும். அந்த வகையில் அரங்கேற்றம் செய்யவுள்ள நல்லூர் திரு. திருமதி. உமாகாந்தன் குமுதா தம்பதிகளின் புதல்வி. செல்வி தீக்ஷனா அவர்களையும்.

நாயன்மார்கட்டு திரு. திருமதி. மயூரன் யாழினி தம்பதிகளின் புதல்வன் செல்வன். ம.ஆரணன் அவர்களையும் நல்லாசி கூறி வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். வித்தியா தேவியாகிய சரஸ்வதியின் கரங்களில் நாத ஒலி எழுப்பும் வீணையை முறைப்படி தன் தாயிடம் கற்ற செல்வி. தீக்ஷனா கலைப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவரது எதிர்காலம் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

செல்வன் ம. ஆரணன் நர்த்தன விநாயகர் நந்தியெம்பெருமான் வாசித்த தபேலாவை கலாவித்தகர் திரு.க.சிவகுமார் ஆசிரியரிடம் முறையாகக் கற்று அரங்கேறுவது பெருமைக்குரிய விடயமாகும். நாயன்மார்கட்டில் வாழ்ந்த கல்வியாலும் செல்வச் சிறப்பாலும் அன்று நிறைந்து விளங்கிய அமரர். ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளையின் பாட்டனாகிய ஆரணன் சிறந்த கலைஞராக விளங்குவார் என்பதில் ஐயமில்லை.

அரங்கேற்றம் காணும் இருவரும் கலையுலகில் நிறைவாகப் பிரகாசிக்க நல்லூர் கந்தனை வேண்டி அமைகின்றேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
தலைவர்.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை,
தலைவர்.
சிவபூமி அறக்கட்டளை இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணா வித்தகியின் குருவின் குருவின் ஆசிச் செய்தி



திரு. திருமதி உமாகாந்தன் குமுதா தம்பதிகளின் புதல்வியான செல்வி. தீக்ஷனாவின் வீணை அரங்க நிகழ்விற்கு ஆசிச்செய்திகள் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க்கையில் இன்பத்தையும் அமைதியையும் அள்ளித்தருபவை கலைகளாகும். வேத காலம் தொட்டு வீணை இசைக்கப்பட்டிருக்கின்றது என பல வரலாற்றுச் சான்றுகளில் காணலாம். அப்படிப்பட்ட பழமை வாய்ந்த வீணை வாத்யத்தை தீக்ஷனா சிறப்பாகப் பயின்று இன்று அரங்கேற்றம் செய்வது பாராட்டத்தக்கது.

தீக்ஷனா தனது தாயாரையே குருவாகக் கொண்டுள்ளார் என்பதே தனிச் சிறப்பாகும். ஸ்ரீமதி குமுதா உமாகாந்தன் சிறந்த வீணை ஆசிரியர்.செல்வி சசிகலா குருசாமியிடம் (திருமதி சுதாகர்) ஆரம்ப பயிற்சியைப்பெற்ற பின் அடிப்படை இசை நுணுக்கங்களை என்னிடம் பயின்று தேர்ச்சி பெற்றவர். தீக்ஷனா இன்னும் சிறந்த பயிற்சி பெற்று பல இசை நிகழ்வுகளை நிகழ்த்த வாழ்த்துகின்றேன்.

திருமதி. நந்தினி விஜயரட்ணம்
முன்னாள் விரிவுரையாளர்
இராமநாதன் நுண்கலைக் கழகம்
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணா வித்தகியின் தாய் குருவின் ஆசிச் செய்தி



இவ்வுலகம் முழுவதும் இயங்கிக்கொண்டே இருக்கின்றது. இவ்வுலக இயக்கத்தில் ஒரு தாளம், லயம் இணைந்திருக்கும் இந்த லயம் பிசகினால் உலக இயற்கையில் பிறழ்வுகள் ஏற்படும். எமது வாழ்வும் ஒரு லயமே. எமது லயம் பிறழ்ந்தால் எமது வாழ்வும் வழிதடுமாறிபோகும். இசையானது எமது பண்பாட்டில் பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப்பிணைந்தது. இன்று எமது பண்பாட்டு விழுமியங்கள் மருவி, மறைந்து வெறும் எழுத்துக்களில் மட்டும் பதியப்பட்டதாக நின்றுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலை மாற்றி எமது கலை, பண்பாட்டு விழுமியங்களை எம் இன்றைய மாணவர் மத்தியில் விதைத்து, இவை என்றும் நிலைத்திருக்க கலை ஆசான்களாகிய எம்மால் மட்டுமே வழிவகை செய்ய முடியும். தமது பிள்ளைகளை அல்லது மாணாவர்களை எவ்வாறு வழிப்படுத்த வேண்டும் என்பதனை உளவியலை முறைப்படி கற்காத எமது முன்னோர் சரியான விதத்தில் அதனையுணர்ந்து கடைப்பிடித்து தமது பிள்ளைகளை நன்முறையில் வழிப்படுத்தினர். இன்று நன்கு கற்ற சமூகத்தில் வாழும் நாம் மேலும் நம் இளம் சந்ததியினரை நெறிப்படுத்தி நம் தேசத்திற்கு நற்பிரைஜைகளை உருவாக்குதல் நம் அனைவரதும் கடமையாகும்.

அந்த வகையில் தனது மகளை எவ்வாறு சமூகத்திற்கேற்ப வளர்க்க வேண்டும் என்பதனை செயற்படுத்திக் காட்டியவர் எனது தாயார் ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக்குருக்கள். இசை, ஓவியம் இரண்டிலுமே திறனுடைய இவர் அரங்கில் இசைகாணும் தனதும், தனது தந்தையின் விருப்பத்தின் பேரிலும் எனக்கு இசை, நடனம், வீணை, வயலின், புல்லாங்குழல் பண்ணிசை என அனைத்தையும் கற்பித்தார். எனது ஓய்வு நேரங்கள் அனைத்தும் இசை கற்பதிலும் பயிற்சிபண்ணுவதிலும், கேட்பதிலுமே செலவழிந்தன.

இவ்வாறான வழிமுறையை நான் எனது புதல்வி தீக்ஷனாவிலும் ஓரளவேனும் கடைப்பிடித்தேன். தனது மூன்றாவது வயதில் தனது பிஞ்சு விரல்களால் வீணையை மீட்டுவதற்கு மிகுந்த விருப்புடன் ஆரம் பிடித்தாள் தொடர்ந்து வாய்ப்பாட்டு, வயலின், நடனம், மிருதங்கம், ஹார்மோனியம் என ஏனையவற்றையும் கற்க ஆரம்பித்தாள். எல்லாவற்றிலுமே தனது திறனை விருப்புடன் வெளிப்படுத்தி வருகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த உருப்படியாயினும் அதன் ஸ்வரத்தை ஒருமுறை கேட்ட உடனேயே ஞாபகப்படுத்தும் சுபாவமுடைய இவள் நான் ஏனைய மாணவர்களுக்கு கற்பித்ததைக்கூடத் தானாகவே வீணையில் இசைப்பதை அவதானித்தேன். இயல்பாகவே கலைஞானமுடைய அவளின் திறனை மேலும் மெருகேற்ற விரும்பியதன் ஆரம்பமே இவ்வரங்கேற்றமாகும். மூன்று தலைமுறையின் அரங்கேற்றம் காணும் அவா இன்று தீக்ஷனாவால் நிறைவேறுவதையிட்டு அகமகிழ்கின்றேன். எனது தாயாரும், முன்னோரும் வானுலகில் இருந்து அவளை ஆசீர்வதிப்பார்கள் என நம்புகின்றேன்.

இதே போன்று திரு திருமதி மயூரன் யாழினி தம்பதிகளின் புதல்வன் ஆரணன் நான் கற்பிக்கும் சென். ஜோண்ஸ் கல்லூரியின் மாணவன். இவர் திரு க.கண்ணதாஸ் அவர்களிடமும், பின்னர் திரு க.சிவகுமார் அவர்களிடமும் மிருதங்கத்தைக் கற்றிருந்தாலும் தனது பாடசாலை நிகழ்வுகளில் மிருதாங்கம், தபேலா இசைத்ததின் மூலமே தன்னை வளர்த்துக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரணனின் 12ஆவது வயதில் தனது கேள்விஞானத்தில் மிருதங்கம் இசைக்கும் திறனை உணர்ந்த நான் வாத்தியப்போட்டி ஒன்றில் தபேலா இசைப்பதற்கு வழிப்படுத்தினேன். அன்றிலிருந்து எமது பாடசாலை நிகழ்வுகளிலும், எனது "சோமராகம்" இசை மன்ற நிகழ்வுகளிலும் தபேலா எனில் ஆரணன் எனும் அளவிற்கு அவன் மிகுந்த விருப்புடன் பங்குபற்றுவான். அந்த வகையில் ஒரு குருவாக எனது மாணவனது தபேலாவையும், மாணவியின் வீணையுடன் இணைந்து அரங்கேற்றம் காண விரும்பினேன். இதனை ஆரணனின் பெற்றோருடன் கதைத்தபோது ஏற்கனவே தம் புதல்வர்களுக்கு அரங்கேற்றம் செய்ய வேண்டும் என விரும்பியிருந்த அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுகொண்டு திரு. சிவகுமார் அவர்களுடைய நெறிப்படுத்தலுடன் இதை நிகழ்த்த விளைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றம் என்பது ஒரு கலைப்பயில்லின் முடிவோ அல்லது கலையின் உச்சத்தை தொட்டதாகவோ அர்த்தம் கிடையாது. அரங்கில் இசைக்கக்கூடிய அறிவைப்பெற்று இங்குதான் தம்மை முதலில் வெளிப்படுத்துகின்றனர். உண்மையில் இதன் பின்னர்தான் அவர்கள் தம் திறனை மெருகூட்டல் வேண்டும். அந்தவகையில் இவ்விருவரையும் இவ் இசைச்சமூகத்திற்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமையடைகின்றேன். இவர்கள் தாம் கற்ற கலையில் மேன்மேலும் மிளிர்வதுடன் மட்டுமன்றி கல்வி, பண்பாடு என்பனவற்றிலும் நன்முறையில் சிறந்தோங்கி வாழ்ந்து எமது தமிழிற்கும் கலைக்கும் சேவைபுரிய வேண்டும் என அவர்களை இந்நாளில் வேண்டுகின்றேன். இவர்கள் இருவருக்கும் குரு ஆசியும், இறை ஆசியும் வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்தித்து வாழ்த்துகின்றேன்.

**இசைக்கலாவித்தகர் திருமதி. குமுதா உமாகாந்தன்**
**ஆசிரியர் யா/சென்.ஜோண்ஸ் கல்லூரி,**
**"சோமராகம்" இசைமன்றம் நல்லூர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபேலா வித்தகனின் குருவின் ஆசிச் செய்தி



திரு திருமதி மயூரன் யாழினி தம்பதியரின் செல்வப் புதல்வன் மயூரன் ஆரணனின் தபேலா அரங்கப் பிரவேச நிகழ்வில் ஆசிச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வு கொள்கின்றேன். செல்வன் ஆரணன் மிருதங்க கலையினை ஆரம்பத்தில் இசைக்கலைமணி நல்லைக் கண்ணதாஸ் அவர்களிடம் முறைப்படி கற்று தேர்ந்தார். தபேலா வாத்தியத்தில் அவருக்கு இருந்த ஆர்வமும், சென். ஜோண்ஸ் கல்லூரியில் அவருக்குக் கிடைத்த வாய்ப்புக்களும் அவரை தபேலா வாத்தியத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தது. இறையருளினால் செல்வன் ஆரணனுக்கு தபேலா வாத்தியத்தை வாசிக்கும் முறைமை, அதன் நுணுக்கங்களைக் கற்பிக்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. அமைதி, சாந்தம், பொறுமை நிரம்பிய ஆரணன் குரு சிஷ்ய முறைப்படி தபேலா வாத்தியத்தை மிகவும் சிரத்தையோடு என்னிடத்திலே கற்றுள்ளார். பாடங்களை மிகவும் அவதானமாக கேட்டு முறைப்படி பிரயோக்கிக்கும் ஆர்வமுடையவர். குரு பக்தி நிரம்பிய ஆரணன் எதிர்காலத்தில் சிறந்த விற்பன்னராக மிளிர்வார் என்பது கண்கூடு, வீணை, தபேலா அரங்கப் பிரவேச நிகழ்வு சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன். செல்வி தீக்ஷனா உமாகாந்தனின் வீணா கானமும், தபேலா இசையும் அரங்கினிலே ஒருசேர இணைந்து, கலை இன்பத்தை வாரி வழங்க வேண்டும் என்று கலைத்தேவி சரஸ்வதியின் பாதம்பணிந்து அரங்கப் பிரவேசம் காணும் இளங்கலைஞர்களையும் பாராட்டி அமைகின்றேன்.

**கலாவித்தகர்.திரு.கனகசபை சிவகுமார்.**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீணையின் நாதமாய் இசையுலகில் இயைந்திருக்க சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபரின் நல்வாழ்த்துக்கள்!

எமது கல்லூரி மாணவியும், "சோமராகம்" இசை மன்ற மாணவியுமாகிய செல்வி தீக்ஷனா உமாகாந்தனின் வீணை அரங்கப் பிரவேசத்தை வாழ்த்தி ஆசி வழங்குவதில் நான் பெருமையும், பேருவகையும் அடைகிறேன்.

செல்வி தீக்ஷனா உமாகாந்தன் சிறுவயது முதல் இசைமீது ஆர்வம் கொண்டவராய் திகழ்கின்றார். இசைக்கருவிகள் இசைப்பதிலும், இனிமையாகப் பாடுவதிலும் திறன் படைத்த இவர் எமது கல்லூரி கலையரங்குகளின் இசை நிகழ்வுகளில் பங்கேற்று, தன் திறன்களை வெளிப்படுத்தி பல போட்டிகளில் வெற்றி பெற்று பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்று வருகின்றார். வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், மிருதங்கம் என பல்வகை வாத்தியங்கள் இசைப்பதில் தேர்ச்சி பெற்று வரும் இவர், கேள்வி ஞானத்தால் தபேலா இசைப்பதிலும் திறமை வாய்ந்தவர். வாய்ப்பாட்டு, நடனம், என கலைகளில் மாத்திரமன்றி கல்வியிலும், தற்காப்புக் கலையைக் கற்பதிலும், சதுரங்கம் முதற்கொண்டு விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் ஊடாகவும் தன் ஆளுமையை வளர்த்து வருகின்றார். தரம் ஒன்பதில் கல்வி கற்கும் தீக்ஷனா பல்துறைகளில் தடம் பதிக்க முயலும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

எமது கல்லூரி பழைய மாணவியும், சென் ஜோன்ஸ் கல்லூரி இசையாசானும், சோமராக இசை மன்றத்தின் போஷகருமாகிய திருமதி குமுதா உமாகாந்தன் அவர்களின் கலைப்புதல்வியாய், மாணவியாய் சிறு வயது முதல் இசைச் சூழலில் வளர்ந்து வரும் செல்வி தீக்ஷனா இன்று வீணை அரங்கப்பிரவேசம் மூலம் கலையுலகில் கால் பதிக்கிறார். சங்கீதத்தின் தத்துவங்களையும் நுட்பங்களையும் தெளிவாக வெளிப்படுத்த உதவும் வீணை வாத்தியத்தின் நாதத்தால் அவர் இவ் இசையுலகில் என்றும் இசைந்திருப்பார் என்பதில் எதுவித ஐயமுமில்லை. பிள்ளைகளின் ஆளுமை விருத்தியின் இரண்டு பக்கங்களில் ஒரு பக்கம் பெற்றோரும் மறுபக்கம் பாடசாலைகளும் உள்ளன. இவ் இரு சாராரும் தம் பொறுப்புணர்ந்து இணைவுடன் செயற்படும்போதே எமது பிள்ளைகள் தம் ஆளுமையில் மேன்மைபெற முடியும். பெற்றோர் தமது பிள்ளைகளின் புதிய பரிமாணங்களை வளர்ப்பதில் தமது ஆற்றல், கவனம், நேரம் என்பவற்றைச் செலவிட வேண்டும். பிள்ளைகளின் உடல் உள ஆரோக்கியத்திற்கும், அறிவுப் பெருக்கத்திற்கும் உணர்வுகளின் ஒழுங்கிற்கும், மன எழுச்சிகளின் மாண்பிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாக நிற்றல் அவசியம். பாடசாலைகள் மாணவர்களிடம் புதைந்துகிடக்கும் நிபுணத்துவ ஆற்றலை பல்வகைத் திறன்களை, குதூகலிக்கும் இயல்புளை இரசனை ஆற்றல்களை, சாதிக்கத் துடிக்கும் வேட்கையை அகழ்ந்தெடுப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அந்த வகையில் அறிவும், தகுதியும், ஆற்றலும், ஆளுமையும், ஒழுங்கும், ஒழுக்கமும், தூய்மையும், உன்னதமும் கொண்ட தனிநபர்களாய் எமது பிள்ளைகள் மேலுயர நாம் தாங்குதூண்களாய் மாறவேண்டும்.

எமது கல்லூரி மாணவி செல்வி தீக்ஷனா உமாகாந்தன் இசைத் துறைக்குள் தனது தாயாரின் உறுதுணையுடன் இரண்டு வயதிலேயே நுழைந்து மூன்று வயது முதல் வீணையைத் திறம்படக்கற்பதில் ஆர்வம் காட்டி இன்று அரங்கேற்றம் காணும் ஆற்றல் பெற்று திகழ்வது குறித்து எமது கல்லூரி சமூகமும் பெருமை கொள்கிறது.

செல்வி தீக்ஷனா உமாகாந்தன் இசையுலகில் என்றும் வீணையின் நாதமாய் இயைபுபட இசைந்திருக்க என் நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் என்றும் உரித்தாகட்டும்.

திருமதி துஷ்யந்தி துசீதரன்
அதிபர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபரின் வாழ்த்துரை



மானிடப்பிறப்பின் ஈடேற்றத்திற்கு அடிப்படையான எல்லையற்ற இன்பத்தை வழங்கும் இசைக்கலையை இவ்வுலகம் பெற்றிருப்பது வரமாகும். தாமும் அனுபவித்து பிறரையும் மகிழ்விக்க வைப்பதில் இசைக்கு நிகர் எதுவுமே இல்லை. "இசையால் வசமாகா இதயமெது" எனும் கூற்றுக்கு இணங்க இசையால் ஆட்பட்டது இவ்வுலகம். "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என இசைக்கும் தமிழுக்கும் தொன்மையான இசை வரலாறுண்டு. அந்தவகையில் எம் கல்லூரித்தாயின் புதல்வன் செல்வன் மயூரன் ஆரணன் இசைக்குத் தன்னை அர்ப்பணித்து இன்று அரங்கு ஏறுவதைக் கண்டு மனம் களிக்கின்றேன்.

கல்லூரியில் கற்கும்போதே இசைத்துறையில் நாட்டம் கொண்டு கல்லூரியின் அனைத்து இசை நிகழ்வுகளிலும் குறிப்பாக தமிழ் விழா, பரிசளிப்பு விழா, வாணி விழா போன்ற அனைத்து விழாக்களிலும் தாள வாத்தியங்கள் இசைத்து வந்துள்ளார். கல்வி அமைச்சினால் நடாத்தப்பெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் மூன்று தடவைகள் வாத்திய பல்லிய நிகழ்வுகளில் பங்குபற்றியும், இரண்டு தடவைகள் தனிவாத்திய இசைக்கு பக்கவாத்தியம் (மிருதங்கம்) இசைத்தும் முதலிடம் பெற்ற பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தபேலா இந்துஸ்தானி இசையில் ஒர் முக்கியமான இசைக்கருவியாகும். செல்வன் மயூரன் ஆரணனின் திறமையை வெளிக்கொணரும் வகையில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடனும் விருப்புடனும் நெறிப்படுத்தி வழிகாட்டிய தபேலா குரு கலாவித்தகர் திரு.க.சிவகுமார் அவர்களுக்கு எம் பாராட்டுக்கள். மற்றும், மிருதங்கத்தில் இவரின் ஆரம்ப குரு திரு.க.கண்ணதாஸ், பெற்றோர்கள் மயூரன், யாழினி தம்பதிகள் ஆகியோரை ஆரணனின் தபேலா அரங்கேற்றம் நிகழ்த்தும் வகையில் ஆக்கமும், ஊக்கமும் வழங்கியமையையிட்டு மனதாரப் பாராட்டுகின்றேன்.

இசையுலகில், இன்றைய அரங்கேற்றத்திற்கு அப்பாலும் உயர்ந்து தானும் சமூகமும் பயன்பெறும் வகையில் தன்னை மேலும் வளர்த்துக்கொள்ள வாழ்த்துவதோடு அதற்கான இறையாசியினையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

V. S. B. துசீதரன்
அதிபர்,
சென். ஜோண்ஸ் கல்லூரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாத் தலைவரின் வாழ்த்துப்பா

**பேரொடு புகழுமிசைக் கலைகள் கற்று**
**பெருமைமிகு கலையுகம் போற்ற வாழி!**



திருவோங்கு யாழ்ப்பாணத் திலக மாக
திகழுமிசை கலைகள்இயல் தித்திக் கின்ற
மருவோங்கு மந்திரஉச் சாட னங்கள்
மாண்புடனே ஒலிக்கின்ற மகிமை நல்லூர்
மெருகோங்க மேதினியில் மேன்மை சேர
மெல்லியளும் மேனனும்நல் அரங்கம் ஏறித்
தருவோங்கத் தந்திடுநற் தகைசால் வித்தை
தரணிபுகழ் தாரகைக ளாக வாழி!

வாரண முகத்தையன் ஆசி நல்க
வானவரும் தேவர்களும் வாழ்த்துக் கூற
ஆரணன்நல் ஆயகலை ஆய்ந்து கற்று
அரங்கேறி ஆற்றுகைசெய் அரிய நாளாம்!
சீரொடுநற் செல்வங்கள் சேர்ந்தி லங்க
சீலமதில் சிறந்தவித் தகனு மாகி
பேரொடுநற் புகழுமிசை கலைகள் கற்று
பெருமைமிகு கலையுலகம் போற்ற வாழி!

நந்தியம் பெருமானார் தந்த வித்தை
நாதலய தாளமொடு நயமும் சேர
தந்திதரு வீணை இசை தீக்ஷனாவும்
தந்தனர்கள் அரங்கப்ரவேசம் இன்று!
செந்தமிழும் சைவமதம் சேர்ந்தே என்றும்
செழித்தோங்கும் உயர்ந்த பதி ஈழ நல்லூர்க்
கந்தவன் ஆசி, அருட் கடாட்சம் பெற்று
கவின்கலையில் திளைத்து நிதம் வாழி! வாழி!

**அன்புடன் இனிதே வாழ்த்தும்,**
**குமரேசன் புரந்தரன்,**
**சட்டத்தரணி.**
**கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



திரு.திருமதி உமாகாந்தன் குமுதா தம்பதிகளின் கலைப்புதல்வியும் "சோம ராகம்" இசை மன்ற மாணவியுமாகிய செல்வி தீக்ஷனா உமாகாந்தன் மற்றும் திரு. திருமதி மயூரன் யாழினி தம்பதியரின் தலைப்புதல்வனும் கலாவித்தகர் க. சிவகுமார் அவர்களின் மாணவனுமாகிய செல்வன் மயூரன் ஆரணன் ஆகியோரது வீணை மற்றும் தபேலா அரங்கப் பிரவேசத்திற்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப் பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். அரங்கேற்றம் என்பது ஒருவரின் கலைத் தேடலிலும் கலைப் பயிற்சியிலும் முக்கிய தருணமாகும். இத்தருணம் கலை பயிற்சி பெறும் எல்லா மாணவர்களுக்கும் எளிதில் வாய்ப்பதில்லை. அந்த வகையில் இத்தருணம் வரை இந்த இளம் கலைஞர்களை அழைத்து வந்த அவர்களின் ஆர்வமும் கடின உழைப்பும் மிகுந்த பாராட்டுக்குரியவை. இவர்களுக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டிய இசை ஆசான்களுக்கும் பெற்றோருக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுகளும் உரித்தாகுக.

இது "சோமராகம்" இசை மன்றத்தினது முதலாவது அரங்கேற்றம் என்று அறிய முடிகிறது. இவ்விசை மன்றத்தை நடத்தி வரும் பரியோவான் கல்லூரி இசையாசிரியரான திருமதி குமுதா உமாகாந்தன் குரலிசை மற்றும் வீணை உட்பட பல்வேறுபட்ட வாத்தியங் களை இசைக்கக்கூடியவர் என்பதுடன் தனது ஆசான் திரு. திலகநாயகம் போல் அவர் களின் நினைவைப் போற்றவென ஆண்டு தோறும் "திலகார்ப்பணம்" என்ற இசை ஆராதனை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதில் தனது மாணவர்களின் திறமைகளை காட்சிப்படுத்தி வருகிறார். அத்துடன் ஆண்டுதோறும் மூத்த இசைக் கலைஞர்களை கௌரவித்தும் வருகிறார். குமுதாவுக்கு சிறுவயது முதல் பல்வேறு கலைத்துறைகளுடன் ஏற்பட்ட பரீட்சயம் அவரை படைப்பாற்றல் மிக்கவராக உருவாக்கியுள்ளதுடன் அவர் தன்னளவில் பல சோதனை முயற்சிகளிலும் தயங்காது ஈடுபட காரணமாகியுள்ளது. அந்தவகையில் இந்த நிகழ்ச்சியில் வீணையுடன் தபேலாவை இணைப்பதினூடு வழமையிலிருந்து மாறுபட்ட கோணத்தில் அரங்கேற்றத்தை வடிவமைத்துள்ளார்.

இவ்விசை அளிக்கைகளானது அனைவருக்கும் நிறைவான அனுபவமாக அமைய அனைவரையும் வாழ்த்துவதோடு தீக்ஷனாவும் ஆரணனும் விரும்பிய துறையில் தொடர்ந்து கனவுகளை விரிக்கவும் தளராது முயற்சிகளை மேற்கொள்ளவும் தயங்காது புதிதை சோதித்துப்பார்க்கவும் உன்னதங்களை எட்டவும் ஒரு தொடக்கப் புள்ளியாக இந்த நிகழ்ச்சி அமைய இறைவன் திருவருளை வேண்டுகிறேன். இனிவரும் காலத்தில் இவர் களின் கலைத்திறமையால் இவர்களின் நாடும் வீடும் அறியப்படும் என நம்புகிறேன்.


கலாநிதி. தா.சனாதனன்<br>
காண்பியக் கலைஞர்<br>
இருக்கைப் பேராசிரியர்-கலை வரலாறு<br>
நுண்கலைத்துறை.<br>
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேனாள் துணை வேந்தரின் வாழ்த்துச்செய்தி



பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்

கலைகளின் பயில்வு மனித முழுமைக்கான வல்லமையாகும். இந்த வகையில் மனதின் சிறகாகி எல்லையற்ற ஆக்கத்திறன் விரிவாக்கத்துக்கும் அனுபவ நிறைவுக்கும் அரணாகும் எங்கள் பண்பாடு கண்ட வீணை, பண்பாட்டிடை வரவான தபேலா ஆகிய வாத்தியங்களின் வரன் முறையான பயில்வுடன் செல்வி தீக்ஷனா உமாகாந்தன், செல்வன் மயூரன் ஆரணன் ஆகியோர் அரங்கப்பிரவேசம் காணும் இவ்வேளை பெறுமதியானது.

சின்ன வயதிலிருந்தே அம்மம்மா நாகபூஷணி சோமசுந்தரக்குருக்கள் மூட்டிய இசை ஆர்வம், குருவாகி எங்கள் பல்கலைக்கழகம் கண்ட கலை ஆளுமையான அம்மா குமுதா உமாகாந்தன் ஊட்டிய இசைக் கல்வி, இன்று தீக்ஷனாவின் வீணாகானமாக எங்களைச் சேர்கின்றது.அவ்வாறே பெற்றோர்கள் மயூரன்- யாழினி தந்த அயராத ஊக்கமுடன் கலாவித்தகர் க.சிவகுமார் குருவாகிட ஆரணனின் தபேலா லயம் இசைந்து கனிகின்றது.

இருவருமே எங்கள் புகழ்பூத்த கல்விச்சாலைகளான சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோண்ஸ் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக அல்லாமல் சின்ன வயதிலிருந்தே கலை, விளையாட்டு, முதலான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தனித்தும் அணியாகவும் தேசிய ரீதியில் பல வெற்றிகளை ஈட்டியவர்கள். இன்றைய இவர்களின் உயர்வுக்கு காரணராகிய பெறோரும் ஆசிரியரும் நாம் போற்றுதற்குரியவர்கள். செல்வி தீக்ஷனாவும், செல்வன் ஆரணனும் கல்வி கலை ஞானச் செல்வர்களாய் என்றென்றும் நிமிர்ந்த பெரு வாழ்வில் நிறைந்திட எல்லையிலா அன்புடன் வாழ்த்துகின்றேன்.

அறிகைத்திறன் விருத்திக்கும் மேலைப்புலத்து பிறந்த வயலின் அதன் அரங்க இசைச் சிறப்பினால் எங்கள் இசை மரபுடன் இணைந்து கொண்டது வரலாறு.

இன்று புலம்பெயர் வாழ்வில் மேலைப்புலத்து எம் இசை வளர்க்கும் லண்டன் ஸ்ருதி மனோலயாவில் எங்கள் சங்கீத கலாவித்தகர் மனோகரன் ரதீஸ்குமாரைக் குருவாகக் கொண்டு வயலினிசை பயின்று தாயகத்தில் அரங்கேற்றம் செய்வது புதிய வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் இடரினும் தளராத எங்கள் கலை வாழ்வின் தொடர்ச்சிக்கு கட்டியம் கூறும் அரங்காகவும் இதன் அர்த்தம் விரிந்திருக்கக் காண்கிறேன். இந்த வரலாற்றினைப் படைப்பதில் அரணாகி, இளவயது முதல் பண்பாட்டு உணர்வுடன் இவர்கள் கலைப்பயில்வைக் காத்து நின்ற அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

அரங்கேற்ற நிகழ்வு அழகாய் அமைந்திடவும் அரங்கேறும் செல்வங்கள் கல்வி - கலை ஞானம் பெருக எங்கள் பண்பாட்டின் பெருஞ்செல்வங்களாக நிமிர்ந்திடவும் எல்லையிலாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன்.
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண. ந. ஜேம்சன் ஞானப்பொன்ராஜா அவர்களின் நல்லாசிச் செய்தி



மனித வாழ்வில் ஓர் பூரணத்துவத்தைக் கொடுக்கும் அம்சமாக இசையானது பரிணமிக்கின்றதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். வெற்றியை நோக்கிய மானிட வாழ்வியலில் தன்தன் உள்ள விருத்தியின் அத்திவாரமாக இசை பரிணமித்துள்ளது.

இப்புனித இசையுலகில் வாழும் சந்தர்ப்பத்தை பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி கொடுக்கும் பெற்றோர்களும், இசை ஆசிரியர்களும், கலைஞுர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். குறிப்பாக இன்றைய நாளில் தம் திறன்களை வளர்த்து தம் வாழ்வியலையும் சிறப்பாக்கி முன்னுதாரணமாக விளங்கும் எனது அருமைச் செல்வங்களான செல்வன் மயூரன் ஆரணன், செல்வி. தீக்ஷனா உமாகாந்தன் ஆகிய இருவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

செல்வன் மயூரன் ஆரணன். சென். ஜோண்ஸ் கல்லூரி உயர்தரம் கணித பிரிவு (2023) மாணவத்தலைவன், பாடசாலைகளில் நடைபெறும் சகலவிதமான வைபவங்களிலும் பாடசாலை சார்பாக தாள வாத்தியம் இசைக்கக்கூடிய மாணவன். வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய ரீதியில் வாத்தியம் சார்ந்த போட்டியாளனாகவும், பக்கவாத்தியம் இசைப்பவனாகவும் தன்னை முன்னிலைப்படுத்தி வெற்றியீட்டியுள்ளார்.

செல்வி. தீக்ஷனா உமாகாந்தன் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, தரம் 9. சிறு வயதிலிருந்தே பாடசாலை மட்ட சகல விதமான நிகழ்வுகளிலும் பங்குபற்றி வருகின்றார், கலை, விளையாட்டு, முதலான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தன்னையும் தன் சார்ந்த அணியையும் முன்னிலைப்படுத்தி வெற்றியீட்டியுள்ளார். குறிப்பாக சதுரங்க போட்டிகளில் வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட முதலான நிலைகளில் சிறுவயதிலிருந்தே மிகுந்த ஆர்வம் காட்டி தனியாகவும் குழுவாகவும் தேசிய ரீதியில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளார். பாடசாலையின் நிகழ்வுகளில் பல்லியம், வாய்ப்பாட்டு, வீணை, தபேலா முதலான இசைத்து பங்குபற்றியுள்ளார். தேசிய ரீதியில் வீணை போட்டியில் பங்குபற்றி மூன்றாம் நிலை பெற்றுள்ளார்.

இவர்களை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய பெற்றோர்கள் ஆசி பெற்றவர்கள். இவர்களின் இசை வளர்ச்சியில் பங்காற்றிய ஆசிரியர்களுக்கு தலை வணங்குகின்றேன். இக் குழந்தைச் செல்வங்கள் சரீர வளர்ச்சியில் சுகபலத்தோடு வாழ, ஞானத்திலும், அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்க இறையாசியை வேண்டி அன்பு முத்தங்களுடன் வாழ்த்துகின்றேன்.

வண.ந. ஜேம்சன் ஞானப்பொன்ராஜா.
முன்னாள் அதிபர்.
யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நர்த்தனாலய ஆசான்களின் வாழ்த்துச்செய்தி



திரு.திருமதி உமாகாந்தன், குமுதா தம்பதியினரின் செல்வப்புதல்வி தீக்ஷனா அவர்களது வீணையும்,திரு, திருமதி மயூரன் , யாழினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆரணன் அவர்களது தபேலாவும் இணைந்த அரங்கப்பிரவேசத்திற்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு குடும்பத்தினரும் கலைசார் ஆர்வமும், சம காலத்தில் கலைப்பயில்வின் சமூக, உளம் சார் தேவைகளையும் மிக ஆழமாகப்புரிந்து கொண்டவர்கள்.அதிலும் வீணை வித்தகி குமுதா அவர்கள் ஒரு புகழ்பூத்த கலைஞராகவும், அனேக இளங் கலைஞர்களுக்கு குருவாகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வருபவர். முதற்கண், இந்த அரிய முயற்சிக்காக எனது நீண்டகால அன்புத்தொடர்ச்சியுள்ள இரண்டு குடும்பத்தினரையும் வாழ்த்துகிறேன்.

இன்று தபேலா அரங்கேற்றம் காணும் ஆரணன் என்னிடம் வட இலங்கை சங்கீத சபையின் தரம் இரண்டு வரை மிருதங்கம் படித்தவர் .காலத்தின் சூட்சும விளையாட்டில் நான் புலம் பெயரவேண்டியமைந்ததால் என்னால் அவருக்கான கற்பித்தலினைத் தொடர முடியாது போய் விட்டது. பின்பு அவர் எனது இனிய நண்பரும், மிருதங்க வித்துவானுமாகிய சிவகுமார் அவர்களிடம் இணைந்து மிருதங்கம், தபேலா இரண்டு வாத்தியங்களையும் விருப்புடன் கற்று இந்நிலைக்கு வந்திருக்கிறார். இதே போன்று மிருதங்கத்திலும் அவர் சாதிக்க வேண்டுமென உள்ளார்ந்த அன்புடன் விரும்பி வாழ்த்துகிறேன்.

அவரை இந்நிலைக்கு உயர்த்திய குருவையும், வழிப்படுத்திய பெற்றோரையும் மகிழ்வுடன் வாழ்த்துகிறேன். தீக்ஷனா எமது ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தில் சிறு வயதிலிருந்து நடனத்தை முறையாக பயின்று வரும் மாணவி ஆவார். தற்பொழுது தரம் மூன்றில் மிகுந்த ஆர்வத்துடன் பயின்று வருகின்றார். இசைச்சூழலில் வளர்ந்தவர். அன்னையிடமிருந்து அன்பையும், இசைஞானத்தையும் ஒருங்கே பெறும் ஒப்பற்ற வரம் பெற்றவர். இரு கலை அரும்புகளும் தமது ஆற்றுகையை கலைப்பெருமக்கள் முன்னிலையில் மிக வெற்றிகரமாக நிகழ்த்தி பேரும், புகழும் அடைய வேண்டுமென எல்லாம் வல்ல நல்லையெம்பிரானைப் பணிந்து வாழ்த்துகிறேன்.

வாழ்க!

**திரு.திருமதி. கண்ணதாஸ் பாலினி தம்பதிகள்.**
**ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி இசை ஆசான்களின் வாழ்த்துச் செய்தி



## கலை சிறக்க வாழ்த்துகின்றோம்

ஆயகலைகள் ஈந்திடும் வாணித்தாய் ஏந்திடும் அற்புதமான இசைக்கருவி வீணை. இவ் வாத்தியத்தை முறையாக கற்று சுருதி, தாளம் இணைத்து மீட்டுவது எளிதில் முடியாது. கலைத்தாயின் கைகளில் நர்த்தனம் புரியும் வீணையை மீட்டுவதில் வாஞ்சை கொண்டவராய் இன்று அரங்கேற்றம் காணும் அன்புக்குரிய மாணவி செல்வி தீக்ஷனா உமாகாந்தன் கலைமகளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவர். இவரின் அரங்கேற்ற நிகழ்வு சிறக்க எனது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் உவகையுடன் கூறி நிற்கின்றேன்.

செல்வி உமாகாந்தன் தீக்ஷனா அவர்கள் கலைக்குடும்பத்தில் ஊற்றெடுத்த முத்து எனலாம். இவர்களுக்கும் எனக்குமான நட்பு இளவயதில் இருந்தே தொடர்ந்து வந்தது. இவரது பேர்த்தியார் ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக்குருக்கள் அவர்களை நான் சந்திக்கும் போதெல்லாம் கலைத்துறைசார் விடயங்களை என்னோடு அதிகம் பகிர்ந்து கொள்வார். தீக்ஷனாவின் தாயும் குருவுமான திருமதி குமுதா உமாகாந்தன் அவர்களை நான் திரு. திலகநாயகம் போல் அவர்களிடம் கற்கும் காலத்தில் இருந்தே கலையில் உள்ள ஆர்வத்தை கண்டு வியந்துள்ளேன். செல்வி தீக்ஷனா கல்வியிலும் கலைத்துறையிலும் ஆர்வமும், கீழ்ப்படிவும் உள்ள மாணவியாக பாடசாலையில் மிளிர்வதை நான் கண்டுள்ளேன். இவரின் திறமை மேன்மேலும் சிறக்க இறைவனை இறைஞ்சி ஆசிகளை வழங்கி நிற்கின்றேன்.




அன்புடன்
திருமதி. நிலானி கோபிசங்கர்
இசை ஆசிரியை
சுண்டிக்குளி மகளீர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கேற்றம் சிறப்புப் பெற வாழ்த்துகின்றேன்



ஆயகலைகளின் தலைவியாம் கலை வாணித்தாயின் அற்புதமான அழகானதும், ஆழமானதுமான இசைக்கருவி வீணை கர்நாடக இசைக்கருவிகளில் முக்கிய கருவியாகத் திகழ்வது வீணை ஆகும். சங்க இலக்கியங்களில்

"துத்தங் கைக்கிளை விளரி தாரம்
உழை இளி ஓசை பண் செழுமப்பாடிச்
சச்சறி கொக்கறை தக்கையோடு
தகுனிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளங் குடமுழா மொந்தை மெந்தோல்......"

என்று கூறுவதற்கு அமைவாக

சங்க காலந்தொட்டு வீணை இசை மனங்களைக் கொள்ளை கொண்டுள்ளது. மணிமேகலை, சிந்தாமணி போன்ற இலக்கியங்கள் வீணையின் இசையினையே "தமிழிசை" என்கின்றது. தேவாரப் பாடல்களின் அநேகமானவை வீணையின் நாதம், இசை கூடியுள்ளது என்கின்றன. திருமால், நாரதரின் வீணை இசையிலும், சிவன், இராவணனின் வீணை இசைத்த சாமகான இசையிலும், வாணி சரஸ்வதி வீணை நாதத்தின் ஸ்வரஸ்தாங்களையும் சிறப்பித்து கலைகளைப் பொழிகின்றாள்.

யாழ் எனும் நரம்புக் கருவியின் வளர்ச்சி வீணை ஆகும். யாழ் இசைத்த பாணஉகள் வாழ்ந்த யாழ்ப்பாணத்தின் இசை பெருகும் நல்லூரான் ஊரில் உதித்த செல்வி. தீக்ஷனா உமாகாந்தன் கைகளில் தவளும் ருத்ர வீணையின் நாத அரங்கப் பிரவேச நன்னாளில் தீக்ஷனா மேன்மேலும் பல்கலைகளிலும் அரங்கேற்றம் கண்டு வளர எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

வீணையோடு இசைந்த தாள வாத்தியங்களில் தபேலா வாத்தியத்தால் தாளமிட்டு, அரங்கேறும் செல்வன் மயூரன் ஆரணனிற்கும் எனது நல்லாசிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

வாழ்க நம் குழந்தைகள் வளர்க இசைக் கலைகள்

இங்ஙனம்
திரமதி.யாழினி கணேசராஜா.
இசை ஆசிரியை.
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடன ஆசானின்
# வாழ்த்துச் செய்தி



திரு. திருமதி உமாகாந்தன் குமுதா தம்பதியினரின் ஏக புத்திரி செல்வி தீக்ஷனா அவர்களின் வீணை அரங்கப்பிரவேசத்திற்கு வாழ்த்துரை கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். தீக்ஷனா அவர்களுக்கு அவரது அன்னையே குருவாகக் கிடைத்தமை பெருவரம்.

அன்னையின் குரலோசையையும் விரலசைவுகளையும் கேட்டும், பார்த்தும் பயின்றவளின் விரலசைவின் விந்தைகள் தான் என்னே!

சப்த ஸ்வரங்களையும் ஒலித்திடுபவளே அழகிய எம் தமிழின் சுவாசம் சங்கீதமே அதை கலையாய் கற்றவள் நீயே. மேடையேறி உம் விரல்கள் நாதம் மீட்டும் வேளை வான்தொடும் தூரம் உம் புகழ் புகழட்டும். தீக்ஷனா உங்கள் அரங்கப்பிரவேசம் இனிதே நடைபெற விநாயகப் பெருமானின் அருளும் என் மனமார்ந்த வாழ்த்துக்களும் என்றும் கூடவே இருக்கும்.

திருமதி ஜசிந்தா சிந்து மனோகர்.
நடன ஆசிரியர்
யாழ் / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க உருப்படிகள்

| உருப்படிகள் | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|
| தானவர்ணம் | நவராகமாலிகை | ஆதி | எல்.திலகநாயகம்போல் |
| ஆனந்தநர்த்தனம் | ஹம்சத்வனி | ஆதி | வர்ண.இராமேஸ்வரன் |
| பன்னிருகைவேலவனே | ஹம்சானந்தி | ரூபகம் | எம்.எம்.தண்டபாணி தேசிகர் |
| ஸாமோதம் ஸிந்தயாமி | சுத்ததன்யாசி | மிஸ்ரசாபு | ஸ்வாதித்திருநாள் மகாராஜா |
| இராகம் தானம் பல்லவி | ஹேமவதி | கண்டதிரிபுடை | குமுதா உமாகாந்தன் |
| நல்லதோர்கனவு | அமிர்தவர்ஷினி | ஆதி | சிவஸ்ரீ.சோ.உமாரமணக்குருக்கள் |
| சின்னவயதிலே | மாண்டு | ஆதி | ப்ரம்மஸ்ரீ.என்.வீரமணிஐயர் |
| தில்லானா | ஸ்ரீ | ஆதி | செல்வச்சீராளன் |
| திருப்புகழ் | ரேவதி | சந்ததாளம் | தவ.தஜேந்திரன் |

மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க நிகழ்வு பற்றிய எமது சிந்தனைகள்

தபேலா வாத்தியமானது ஹிந்துஸ்தான் இசைக்கருவியாக இருந்த போதும் இன்று கர்நாடக இசைக் கச்சேரிகளில் கணிசமான இடத்தை வகித்து வருகின்றது. எவ்வாறு மேலைத்தேய வயலின் எமது கர்நாடக இசையின் பிரதான பக்க வாத்தியமாக மாற்றம் கண்டதோ அது போன்றே தபேலாவும்-ஹிந்துஸ்தான் வாத்தியங்களுக்குரிய சொற்கட்டுக்களைத் தவிர்த்து மிருதங்கச் சொற்கட்டுக்களின் அடிப்படையிலேயே லாவகமாக தனக்கான தனித் தன்மையுடன் இசைக்கப்பட்டு வருகின்றது.

தென்னிந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி கர்நாடக இசையில் தபேலா இசைத்த கலைஞர்கள் இருந்துள்ளனர். இன்றும் பலர் பிரகாசித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கர்நாடக இசையின் பிரதான தாள வாத்தியம் மிருதங்கமாகத் திகழ்வது மறுக்க முடியாதது. எனினும் நாம் உபதாள வாத்தியமாக பயன்படுத்தலாம். வீணை போன்ற வாத்திய இசையை மெருகூட்டுவதற்கு இதனைப் பயன்படுத்த முடியும். அந்த வகையில் இவ்வரங்கேற்றம் ஒரு புதிய சோதனை முயற்சியாக சாதனை படைத்திட கலாரசிகர்களின் காதுகளில் தவழ்ந்திட வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் பதியும் இசைக்கச்சேரிகள்.

## கலாநிதி சுகன்யா அரவிந்தன்

### இசைக்கலை அறிமுகம்

இசைக்கலை நுண்கலைகளுள் ஒன்று, சிறந்த பண்புகளை வளர்த்தெடுப்பது, மனதை சீர்ப்படுத்துவது, இறைவனோடு ஒன்றிக்கவல்லது, இதற்கும் அப்பால் தன்னுடைய பண்பாட்டின் அடையாளமாகத் தொழிற்படுவது, காலத்தின் கண்ணாடியாகத் திகழ்வது, தான் இயங்கும் பண்பாட்டின் வேர்களை அழிந்துவிடாது, காலத்துக்கும் கட்டுறுதியோடு காத்து நிற்பது, இவ்வாறு பல்வேறு சமூகப்பரிமாணங்களை இசைக்கலை உள்ளடக்கியிருக்கின்றது. மேற்கூறப்பட்ட இசையின் ஒவ்வொரு பொருண்மை பற்றியும் மிக விரிவாகவும் காத்திரமாகவும் இசையின் தளம் நின்று நோக்கமுடியும்.

பொதுவாக குழந்தைகளுக்கான இசைப்பயில்வு என்பது, கலைஞனைப் பிரசவிப்பது என்பதற்கப்பால் சுயகட்டுப்பாட்டோடு தன்னுடைய வாழ்வை இரசனையுடன் வாழ்வதற்கான வழிப்படுத்தலாகவே கருதப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நோக்கத்தின்பால் ஈர்க்கப்படுகின்ற குழந்தைகள் கலைஞர்களாக பிற்காலத்திலே ஆற்றுகைக்களங்களில் சாதிக்கின்றார்கள்.

ஆக, இசைப்பயில்வு என்பது பல சாதகங்களை எமக்கு வழங்கினாலும் ஒரு நேரான பார்வை கொண்ட, இயல்பான சமூகத்தை வளர்த்தெடுப்பதற்கு வழி சமைக்கின்றது என்றால் மிகையில்லை.

### பயில்வு நிலையில் இசைக்கலை

“குருவில்லா வித்தை பாழ்” என்பது முதுமொழி. எந்தவொரு வித்தையும் குருவினுடைய வழிப்படுத்தலின்றி முழுமைபெறமுடியாது.

ஆரம்பகாலங்களிலே குருகுல முறைப்படி பொருத்தமான குருவினைத் தேடியடைந்து, அவருடனேயே வாழ்ந்து, குருவானவர் கற்பிக்கின்றவற்றை, கற்பிக்கின்ற பொழுதுகளில் மாத்திரம் பயின்று, குருவிற்கான பணிவிடைகளைச் செய்து, குருவானவர், தன்னுடைய மாணவன், தான் நினைத்த தரத்தை அடைந்து விட்டான் என்பதனை உறுதிப்படுத்திய பின்னரே இசைப்பயில்வினை ஒரு மாணவன் பூர்த்தி செய்துகொள்வது மரபாகி இருந்தது.

சிந்தனையும் அறிவியலும் வளர ஏனைய துறைகள் போல, அனைவருக்கான இசைப் பயில்வு என்ற கருத்தியலுக்கமைவாக பாடசாலைகளாலும் நிறுவனங்களாலும் இசைக்கலை போதிக்கப்பட்டது. இது இசைப்பயில்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இசைஆசிரியர் என்பவர் மாணவருக்கு தனக்குத் தெரிந்ததை ஒழிவு மறைவில்லாமல் கற்பிப்பவராகவும், இசைபயில்விலே ஒரு மாணவன் தெரிந்துகொள்ள வேண்டிய கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளைத் தெளிவுறப் பயில்விப்பவனாக செயற்பட வேண்டும். மாணவரும் தம்முடைய குருவிலே முழுமையான நம்பிக்கை, விசுவாசம் கொண்டு பயிலும் பட்சத்திலே இசையிலே சித்திக்க முடியும்.

கலைப்பயில்விலே குரு அவர்களுடைய இடம் பற்றி இந்த காலத்திலே பேசப்படவேண்டிய தேவை முனைப்படைந்திருக்கின்றது.

குறிப்பாக இசைக்கலையினைப் பொறுத்தவரையிலே மாணவருக்கு இசைக்கான அடிப்படைகளான சுருதி, லயம் இரண்டிற்கான அடித்தளத்தையும் செவ்வனவே அமைத்துக்கொடுப்பவர் "குரு" வானவராகக் கொள்ளப்படுகின்றார். இவரே குறித்த மாணவனை இசை எனப்படுகின்ற கலைப்பாதையிலே நடைபோடுவதற்கு ஏற்றவராக செதுக்கும் சிற்பியாக விளங்குகின்றார். இன்றைய மாணவர்கள், பலரிடமும் சென்று இசைபயிலும் சந்தர்ப்பங்களை சமகாலக் கல்விமுறை அமைத்துக்கொடுக்கின்ற பொழுதிலும், மாணவர்களுக்கு இசைக்கான அடித்தளத்தினை சீராக அமைத்து, இசைக்கலைக்குரியவனாக மாணவர்களைச் செதுக்குகின்ற ஆசிரியர்களே தம்முடைய குரு என்னும் அந்தஸ்த்தைப் பெற்றவராகின்றார் என்கின்ற தத்துவத்தினை மனதிலே பதியவைக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்கின்றது. இந்த குருவினுடைய "அருட்பார்வையே" மாணவனை கலையிலே சித்திக்கச்செய்யும்.

இவ்வாறான ஒரு பயில்வுக்கான பிரத்தியேக மரபினை இசைக்கலை கொண்டிருக்கின்ற அதேவேளை, இசைக்கலைப்பயில்வின் அதிகபட்ச அடைவு மட்டம் என்பது ஆற்றுகைக் கலைஞர்களை சமூகத்துக்கு வழங்குதல். இசை பயிலுகின்ற ஒவ்வொருனும் பாடத்தகுந்தவனாக ஆக்குவது ஒவ்வொரு இசை ஆசிரியர்களுடைய பொறுப்பாகும்.

## வெற்றிகரமான இசைக்கச்சேரி

இதன் பின்னணியில், இசைப்பயில்வினுடைய உச்சமாக வெற்றிகரமான ஆற்றுகைக் கலைஞராக சமூகத்திலே வலம் வருதலைக் குறிப்பிடமுடியும். வெற்றிகரமான ஆற்றுகைக்கலைஞர் என்பதன் அர்த்தம் பற்றி சற்று விரிவாக நோக்கலாம்.

ஆற்றுகை மேடையிலே பாடுபவர்கள் அனைவரும் வெற்றிகரமான கலைஞர்கள் என்கின்ற வட்டத்தினுள் அடக்கிவிட முடியுமா என்பது சிந்திக்க வேண்டிய முக்கியமாகன ஒரு விடயமாகும். அது மிகச்சிறிய அல்லது வெளிப்படையாகப் பார்க்கின்ற பொழுது அர்த்தமற்றதாகவும் இருக்கலாம். ஆனால் ஆற்றுகையில் இணைகின்ற ஒவ்வொரு வரும் இது பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இசை ஆற்றுகை என்பது யார் நிகழ்த்துவது, யாருக்காக நிகழ்த்தப்படுவது, ஏன் நிகழ்த்தப்படுகின்றது, எங்கு நிகழ்த்தப்படுகின்றது போன்ற வினாக்கள் ஆற்றுகையாளர் மத்தியிலும், இரசிகர்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மத்தியிலும் இருக்கவேண்டிய முக்கியமான விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை ஆற்றுகை நிகழ்வு ஒன்றினை ஏற்பாடுசெய்கின்ற பொழுது ஏற்பாட்டாளர்கள் தம்முடைய நோக்கத்தை நிறைவுசெய்யக்கூடிய, தம்முடைய பார்வையாளர்களுடைய மனங்களை மகிழ்விக்கக்கூடிய கலைஞரை இனங்கண்டு ஒப்பந்தத்தை செய்துகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக இசை நிறுவனம் ஒன்றிலே இசைவிழாவுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற கச்சேரியானது இசைநுட்பங்கள் நிறைந்ததாக, இசைபயிலும் மாணவர்களுக்குப் பயன்விளைவிப்பதாக இருத்தல் அவசியம். அவ்வாறான கலைஞரை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவு செய்வதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். ஆலயம் சார் இசைநிகழ்ச்சிகளாயின் பலவிதமான இரசனை மட்டங்களைக் கொண்ட இரசிகர் கூட்டத்தினைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சியாக அமையவேண்டியிருப்பதால் அதற்குப் பொருத்தமான ஜன ரஞ்சகக்கலைஞரைத் தெரிவுசெய்வது அவசியமாகின்றது. பொருத்தமான கலைஞர்களை நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்தல் என்பது வெற்றிகராமான இசைநிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்வதற்குப் பலமாக அமையும்.

**வெற்றிகரமான இசைக்கச்சேரியினை ஒழுங்கமைத்தல்**

மேலே குறிப்பிட்ட விடயம் தவிர, வேறு சில விடயங்களிலும் அந்த வெற்றிகரமான இசைக்கச்சேரி ஒன்றினை அமைத்தலில் கவனம் செலுத்தவேண்டிய தேவை இருக்கின்றது.

இசைக்கச்சேரி என்பது ஆற்றுகையாளர், பார்வையாளர் எனப்படுகின்ற இரு தரப்புக்களிடையே இசைக்கோலங்களால் நடத்தப்படுகின்ற பரிவர்த்தனை. இது சரியான முறையிலே முன்னெடுக்கப்படுகின்ற பொழுது நிகழ்ச்சி வெற்றிகரமானதாக அமைகின்றது. ஆற்றுகையாளர் பாடுவதை பார்வையாளர் புரிந்துகொண்டு, அதனை ஏற்றுக்கொள்ளுவது, ஏற்றுக்கொள்ளுதல் என்பது இங்கு "இரசிப்பது" என்றவாறு அமைகின்றது. இந்த ஏற்றுக்கொள்ளலுக்கும், அதனை ஆமோதித்தலுக்குமான செயற்பாடுகளாக கைதட்டுதல், தலை ஆட்டுதல், சத்தமின்றி இசையோடு ஒன்றித்தல், அதன் விளைவாக ஏற்படுகின்ற தலை அசைவுகள் போன்றன வெளிப்பாடுகளாக அமையும். இந்த வெளிப்பாடுகள் ஆற்றுகையாளனைச் சென்றடைகின்ற பொழுது ஆற்றுகையாளன் தன்னுடைய ஆற்றுகை சரியான முறையிலே சபையோரைச் சென்றடைந்திருக்கின்றது என்தனை உணரவும், தன்னுடைய பாதை சரியாகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதனை உணர்ந்துமேலும் சிறப்பாக தன்னுடைய படைப்பினை ஆக்குவதற்கு முயற்சிக்கின்றான். பார்வையாளரிடமிருந்து எவ்வித எதிர்வினைகளும் ஏற்படாத போது ஆற்றுகையாளன் தன்னுடைய ஆற்றுகையின் தன்மையினைப் புரிந்து கொள்ளவும், சபையோரைத் தன்வசப்படுத்தவுமான உக்திகளை ஆற்றுகையின் போதே மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகுகின்றான். ஆற்றுகையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களுடைய கவனத்தத் தன்பால் மாத்திரம் இருக்கச்செய்யக்கூடிய கலைஞன் வெற்றிகரமான படைப்பாளியாகின்றான். இந்த கொடுக்கல் வாங்கல் பொருத்தமான வகையிலே முன்னெடுக்கப்படுகின்ற பொழுது இசைக்கச்சேரி வெற்றிகரமாக அமையும்.

ஆற்றுகையாளன் தன்னுடைய முழுமையான ஆற்றலை, திறமையினை சபையோர் மத்தியிலே சமர்ப்பித்தல் என்பதற்கப்பால் சபையோர் இரசிக்கும் வண்ணம் இசைக்கச்சேரி அமைதல் வேண்டும் என்கின்ற மனப்பக்குவத்தோடு ஆற்றுகையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆலயச்சூழலிலே ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்ற இசைக்கச்சேரி நிகழ்வுக்கு மிகச்சிக்கலான இசையியல் அம்சங்களைக் கச்சேரியிலே இணைத்துக்கொள்வது என்பது சில சந்தர்ப்பங்களிலே ஆற்றுகையின் தோல்விக்கு வழிகோலுவதாக அமையலாம். ஆலயச்சூழலிலே இணைகின்ற இரசிகர்கள் பலவிதமானவர்களாக இருக்கலாம். இசை தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், இசை பயிலாத ஆனால் இசை இரசிகர்கள், கர்நாடக இசையிலே நாட்டமற்றவர்கள், விரும்பாதவர்கள், எனப்பலரும் இருப்பார்கள். முக்கியமாக பக்திக்கு முதன்மை கொடுப்பவர்களாக இருப்பார்கள். இப்பண்புகொண்ட சபையோர்க்கு ஆற்றுகையாளன் தன்னுடைய இசைத்திறமையினை நிலைநாட்டுவதற்காக இசையியல் பதங்களிலே சொல்லப்போனால் விவாதி மேளங்களும், அவற்றின் விரிவான ஆலாபனைகளும், விபரமான நிரவல், மற்றும் கற்பனை ஸ்வரங்கள், கணக்கு வழக்குகள், பொருள் புரியாத பெருமளவிலே பயன்பாட்டிலில்லாத இசை உருப்படிகளையும் தன்னுடைய ஆற்றுகையிலே இணைத்துக்கொள்வது என்பது சபையோர்க்கு வேப்பங்காய் சுவைப்பது போல, ஒருவித தண்டனையினை இசைகொண்டு சபையினருக்கு வழங்குவதுபோல அமையும்.

இசை என்பது இன்பம் பயப்பது. சபையோர் எதிர்பார்த்து வருவதை நிறைவுசெய்து அனுப்புவதே ஒரு ஆற்றுகையாளனுடைய கடமையாகின்றது. ஆக, ஆலயச் சூழலிலே முன்னெடுக்கின்ற இசைக்கச்சேரியாக இருந்தால், பெரும்பாலும் சபையோர்க்குத் தெரிந்த, புரிந்துகொள்ளக்கூடிய பாடல்களைத் தெரிவுசெய்வது பொருத்தமாக இருக்கும். ஆலயங்களிலே இசை இரசிகர்களுடைய பசியினைப் போக்குவது நாதஸ்வரஇசை. ஆக, நாதஸ்வரத்திலே அடிக்கடி வாசிக்கின்ற நாதலோலுடை, நகுமோ, ஸ்வரராகசுதா, போன்ற சம்பிரதாய உருப்படிகளைத் தெரிவு செய்யலாம். தவிர, ஆலயத்திலுறைகின்ற சுவாமி மேல் பாடப்பட்ட பாடல்களைத் தெரிவு செய்லாம். கச்சேரியின் இறுதியிலே சில பஜனைப் பாடல்களைப் பாடி நிறைவுசெய்யலாம். சபையோருடைய இணைவு பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில் ஆற்றுகைக் கலைஞர் தன்னுடன் சபையோரையும் பஜனைகளிலே இணையச்செய்யலாம். இது சபையோர் மத்தியிலே மிகச்சிறந்த ஆதரவைப் பெறக்கூடிய நிகழ்வாக அமையலாம்.

**இசைக்கச்சேரிக்கான திட்டமிடல்**

கச்சேரியின் கால அளவு எவ்வளவாக இருந்தாலும் திட்டமிடல் என்பது மிக அவசியமாகின்றது. குறுகிய கால அளவாக இருந்தாலும் சபையோருடைய எதிர்பார்ப்பினை திருப்திப்படுத்தவேண்டியது ஒவ்வொரு ஆற்றுகையாளனுக்குமுரிய பொறுப்பாகின்றது. பெரும்பாலும் இசைக்கச்சேரி ஒன்றினை பிரதான கலைஞரே திட்டமிடுவது வழக்கம். இது வாய்ப்பாட்டுக்கச்சேரியாக இருந்தாலும் சரி, வாத்திய இசைக்கச்சேரியாக இருந்தாலும் பிரதான கலைஞரே நிகழ்வைத்திட்டமிடுபவராக இருக்கின்றார்.

இசைக்கச்சேரிக்காக வழங்கப்படுகின்ற நேர அளவுக்கேற்ப நிகழ்வுக்கான திட்டமிடல் மிக அவசியமாகின்றது. அது சொற்ப நேரமாக இருந்தாலும் கூட. காரணம் அந்த குறித்த நேரப்பரப்பிற்குள் பிரதானகலைஞர் மற்றும் பக்கவாத்தியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களுடைய திறமையினை சபையோர் மத்தியிலே நிலைநிறுத்தவேண்டிய தேவை, சபையோரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்து, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய கடமை, நிகழ்வின் நோக்கத்தைப் பூர்த்திசெய்துகொள்ளவேண்டிய தேவை இப்படிப் பல பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டிய கட்டாயத்தில் பிரதானகலைஞர் செயற்படவேண்டிய தேவை இருக்கின்றது இத்தனை நோக்கங்களையும் மனதில் கொண்டு நிகழ்வினைக் கச்சிதமாகத் திட்டமிடுகின்ற பொழுது நிகழ்வு வெற்றிக்கு வழிப்படுத்தப்படும்.

**நேர அளவின் அடிப்படையிலே திட்டமிடல்**

பெரும்பாலும் இசைக்கச்சேரி என்று சொல்லுகின்ற பொழுது 30 நிமிடங்களே ஆகக் குறைந்த நேர அளவாகக் கொள்ளப்படும். இந்த முப்பது நிமிட நேரங்களையும் சபையோரை ஆற்றுகையாளரில் கவனம் செலுத்தும்படி இசையால் கட்டிப்போட வேண்டியது ஆற்றுகையாளருடைய பணி.

முப்பது நிமிட நேரத்துள் ஒரு உருப்படியைத் தெரிவுசெய்து மனோதர்மப் பகுதிகளுடன் பாடக்கூடிய திறமை ஒரு ஆற்றுகையாளனுக்கு இருந்தாலும் கூட சபையோர்க்கு முப்பது நிமிடத்துளிகள் ஒரே இராகத்தை இரசிப்பது என்பது சற்றுச் சிரமமான காரியமே. ஆகவே வேறுபட்ட இராகங்களை இணைத்து பாடல்களைக் கோர்வையாக்குகின்ற பொழுது நிகழ்ச்சியினுடைய இரசனைத்தன்மையிலே சிறப்பினை ஏற்படுத்தும்.

முப்பது நிமிடத்துளிகளுக்கான இசை அரங்கிலே மொத்தமாக நான்கு உருப்படிகளைத் தெரிவு செய்ய முடியும். முதலாவதாக விநாயகர் கீர்த்தனை, தொடர்ந்து பிரதான உருப்படி, துக்கடா என்று சொல்லப்படுகின்ற இலகுவான கீர்த்தனை அல்லது பாரதியார் பாடல் போன்ற யாதேனும் ஒரு பாடல், இறுதியிலே தில்லானா அல்லது திருப்புகழ் என்றவாறு ஒழுங்குபடுத்தலாம். இங்கு விநாயகர் கீர்த்தனைக்குப்பதிலாக இலகுவான சிறிய வர்ணம் பாடலாம். பூர்வாங்கம் பாடப்படுகின்ற காலத்திலிருந்து உத்தராங்கம் சற்று விறுவிறுப்பாக இருந்தால் சபை களைகட்டும். இரண்டாவதாக துரிதமான சிறிய கீர்த்தனை பாடலாம், அல்லது நேரடியாக பிரதான உருப்படிக்குச் செல்லலாம். பிரதான உருப்படி என்று சொல்லப்படுவது, இராக ஆலாபனை, கீர்த்தனை, நிரவல், கற்பனைஸ்வரம் என்கின்ற ஒழுங்கிலே பாடப்படுவது. கச்சேரியிலே பிரதான உருப்படிதான் ஆற்றுகையாளருடைய மனோதர்மத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்ற உருப்படியாக அமைகின்றது. ஆகவே முப்பது நிமிட இசைக்கச்சேரியிலே இராக ஆலாபனை, கீர்த்தனை, கற்பனை ஸ்வரம் இவை மாத்திரமே பாடுவதற்கு காலம் ஏற்றதாக அமையும். அல்லது கற்பனை ஸ்வரப் பகுதியிலே முதலாம்காலத்தைத் தவிர்த்து, இரண்டாம் காலத்திலே கற்பனை ஸ்வரம் பாடி, சிறிய குறைப்புப் பாடி மோறாவுடன் நிறைவு செய்யலாம். இரண்டாவது உருப்படியாக சிறிய துரிதமான கீர்த்தனை பாடினால், பிரதான உருப்படிக்குப்பின் தில்லானா அல்லது திருப்புகழ் பாடுவதே பொருத்தமானதாக இருக்கும். இரண்டாவது சிறிய கீர்த்தனை நிகழ்ச்சியிலே உட்சேர்க்கப்படவில்லையானால் துக்கடா பாட நேரம் போதுமானதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கீழ்வரும் அட்டவணை நிகழ்ச்சிகளுடைய கால அளவுகளுக்கேற்ப திட்டமிடக் கூடிய உருப்படிகளுடைய எண்ணிக்கைகள் பற்றிய விளக்கத்தைத் தரும். இந்த விபரம் தீர்க்கமான முடிவல்ல. ஒரு கச்சேரியை வடிவமைத்துக் கொள்வதற்கு ஆற்றுகையாளனுக்குப் பூரண சுதந்திரம் இருக்கின்றது. பெரும்பாலும் இசை பயிலுக்கின்ற மாணவர்களுக்கு அல்லது வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு இந்த விபரங்கள் பயனுடையதாக இருக்கலாம்.

| நிகழ்ச்சிக்கான நேரம் | 1ம் உருப்படி | 2ம் உருப்படி | 3ம் உருப்படி | 4ம் உருப்படி | 5ம் உருப்படி | 6ம் உருப்படி | 7ம் உருப்படி | 8ம் உருப்படி | 9ம் உருப்படி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30 நிமிடம் | விநாயகர் கீர்த்தனம் / சிறிய வர்ணம் | சிறிய இலகுவான கீர்த்தனம் | பிரதான உருப்படி (இராகம், கற்பனை ஸ்வரம்) | துக்கடா | தில்லானா /திருப்புகழ் | | | | |
| 45 நிமிடம் | விநாயகர் கீர்த்தனம்/ சிறிய வர்ணம் | கீர்த்தனம் 2ம் காலம் கற்பனை ஸ்வரம் /சிட்டை ஸ்வம் | பிரதான உருப்படி (இராக ஆலாபனை, 1ம்,2ம் கால கற்பனை ஸ்வரம், குறைப்பு, மோறா) | துக்கடா | தில்லானா | திருப்புகழ் | | | |
| 1 மணி | விநாயகர் கீர்த்தனம் (கற்பனை ஸ்வரம்)ர் வர்ணம் 2 காலம்/ திஸ்ரம் | கீர்த்தனம் (சிறிய ஆலாபனை, 2ம் காலம் கற்பனை ஸ்வரம்) | விறுவிறுப்பான கீர்த்தனை | பிரதான உருப்படி (இராக ஆலாபனை, நிரவல், கற்பனை ஸ்வரம், குறைப்பு, மோறா | துக்கடா | தில்லானா | திருப்புகழ் | | |
| 1.30 மணி | விநாயகர் கீர்த்தனம் (கற்பனை ஸ்வரம்/ வர்ணம் 2 காலம்/ விவகாரங்கள் எதுவும் பாடலாம்) | இலகுவான கீர்த்தனம் | கீர்த்தனை (இராக ஆலாபனை கற்பனா ஸ்வரம்) | விறுவிறுப்பான கீர்த்தனை | பிரதான உருப்படி (இராக ஆலாபனை, நிரவல், கற்பனை ஸ்வரம், குறைப்பு, மோறா, ஆற்றுகையாளருடை இயலுமையைப் பொறுத்து கிரகபேதம் கற்பனை ஸ்வரத்திலே இராமாலிகை ஸ்வரம், கணக்குகள் பாடலாம்) | துக்கடா | துக்கடா | தில்லானா | திருப்புகழ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு:**

இந்த உருப்படிகளுடைய தேர்வானது கட்டாயமானதல்ல. நேரத்தைக் கருத்தில் கொண்டு ஆற்றுகையாளன் தன்னுடைய எண்ணங்களுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

45 நிமிட கச்சேரியிலிருந்து மிருதங்கக்கலைஞருக்கானதனி ஆவர்த்தனத்துக்கான நேரம் வழங்கப்படலாம்.

ஆற்றுகையாளருக்குத் தரப்பட்ட நிகழ்வுக்கான காலத்திலிருந்து பத்து நிமிடத்துளிகள் குறைவாகவே பிரதான கலைஞஉ தனக்குரிய நேரமாக திட்டமிடப்பட வேண்டும்.ஒதுக்கப்பட்ட பத்து நிமிடத்துளிகளும் பக்கவாத்தியக்கலைஞருக்கானதாகக் கொடுக்கப்படலாம். இது 45 நிமிட நேரத்திற்கு அதிகமாக காலப்பொழுதுகள் வழங்கப்படுமாயின் கவனத்தில் கொள்ளலாம்.

கர்நாடக இசைக்கச்சேரிகள் முன்பு பலமணி நேரங்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டிருந்தாலும் தற்போதைய காலங்களிலே 1.30 மணி நேரக்க்சசேரிகளே அதிக நேரமுள்ள கச்சேரிகளாக அமைக்கப்படுகின்றன. ஆனால் இதற்கும் அதிகமான நேரங்கள் இசைக்கச்சேரிக்காகக் கொடுக்கப்படுகின்ற பொழுது 1.00 மணி நேரத்துக்கு திட்டமிட்டதை அடிப்படையாகக் கொண்டு அடுத்த மணிக்கான உருப்படிகளைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

**களம் பற்றிய திட்டமிடல்**

ஒரு இசைக்கச்சேரியை திட்டமிடுகின்ற பொழுது அதன் களம் பற்றி பிரதான கலைஞர் கவனம் செத்தவேண்டியது அவசியம். இது கச்சேரிக்கான உருப்படிகளைப் பொருத்தமான வகையிலே தெரிவுசெய்வதற்கு உதவியாக இருக்கும். ஆலய நிகழ்வுகள், இசைவிழாக்கள், சிறுவர், முதியோர் இல்லங்கள், பாடசாலை ஆண்டு விழாக்கள், கருத்தரங்குகள், இசை நிறுவனங்கள் போன்ற வேறுபட்ட தளங்களிலே முன்னெடுக்கப்படுகின்ற இசைக்கச்சேரிகளுக்காக உருப்படிகளைத் தெரிவு செய்கின்ற பொழுது, நிகழ்வுக்கான களம் அதிக தாக்கம் செலுத்தும். களங்களுக்குப் பொருத்தமான வகையிலே உருப்படிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். சபையோரின் மகிழ்வுக்காகவே இசைக்கச்சேரிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்பதனை பிரதான கலைஞர் மனதிலே கொண்டு நிகழ்வுக்கான திட்டமிடலை சீரான வகையிலே செய்வது அவசியம்.

**இசையியல் நுட்பங்கள் சார்ந்த திட்டமிடல்**

இவை தவிர, இசைக்கச்சேரியினை எவ்வாறு வடிவமைக்கலாம் என்பதனை நோக்கலாம். தெரிவுசெய்யப்படுகின்ற உருப்படிகள் பெரும்பாலும் சபையோர்களுக்கு புரியும் மொழிகளில் இருக்கும் வகையிலே பார்த்துக்கொள்ளலாம். அல்லது சபை யோர்களுக்குப் பரிச்சயமான உருப்படிகளைத் தெரிவுசெய்யலாம். மக்களுக்குத் தெரிந்த உருப்படிகளை திறமையாகப்பாடுகின்ற பொழுது அதற்கான வரவேற்பானது அதிகமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உருப்படிகளுடைய இராகங்களின் தெரிவு**

உருப்படிகளைத் தெரிவுசெய்கின்ற பொழுது உருப்படிகளுடைய இராகங்களும், தாளங்களும் ஒன்றிலிருந்து ஒன்று மிகவும் வேறுபட்டிருப்பதாகத் திட்டமிட்டால் கேட்பவர்களுக்கு வேறுப்பட்ட சுகானுபவங்களை நிகழ்வு வழங்கும். ஒரே சாயலையுடைய இராகங்களை அடுத்தடுத்துப் பாடுகின்றபொழுது இசையியல் தேர்ச்சிபெறாத இரசிகர்கள் ஒரேமாதிரியான அனுபவத்தையே நீண்ட நேரம்பெறுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுகின்றது ஆக, நிகழ்வு சலிப்புத்தட்டுவதாக அமைய வாய்ப்பேற்படுகின்றது.

பொதுவாக கச்சேரிகள் ஆரம்பிக்கின்ற முதலாவத உருப்படியிலேயே சபையோரை வசப்படுத்திக் கொள்வது கச்சேரியின் வெற்றிக்குக்காலாக அமையும். முதலாவது உருப்படி ஹம்சத்வனி. அமிர்தவர்ஷினி போன்ற கம்பீரமான அதேவேளை துரிகமாகப்பாடக்கூடிய இராகங்களாகத் தெரிவு செய்வது சிறப்பு. இரண்டாவதாகத் தெரிவு செய்கின்ற உருப்படிகளும் மோகனம், ஆபோகி, பகுதாரி, ஆரபி, ஹிந்தோளம், வரமு போன்ற இராகங்களிலே அமையப் பெறலாம். பிரதான உருப்படிகள் பெரும்பாலும் சம்பிரதாயம் நிறைந்த, விரிவான ஆலாபனை செய்யக்கூடிய கல்யாணி, சங்கராபரணம், சாருகேசி, சண்கப்ரியா, லதாங்கி, வாசஸ்பதி, தர்மவதி, சிம்மேந்திரமத்திமம், தோடி, மாயாமாளவகௌளை போன்ற இன்னும் பல சம்பூர்ண இராகங்களைக்குறிப்பிடலாம். அல்லது காம்போதி, ஆரபி, பிலஹரி போன்ற ஜன்னிய இராகங்களையும் தெரிவு செய்யலாம். எப்போதும் விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கக்கூடிய இராகங்களைத் தெரிவுசெய்வது பொருத்தமாக அமையும். இவ்வாறான சம்பிரதாயமான இராகங்களே விவகாரம் பண்ணவும் பொருத்தமாக அமையும்.

இராகங்கள் தெரிவு செய்கின்ற பொழுது ஒரே ஸ்வரஸ்தானங்களைக் கொண்ட இராகங்கள் அடுத்தடுத்துப் பாடுவதை தவிர்ப்பது சிறப்பு. சபையோர்களின் செவிகளுக்கு வேறுபட்ட ஒலிஅலைகள் சிறப்பான அனுபவத்தைக் கொடுக்கும். பிரதிமத்திம இராகங்கள், காம்போதி, பிலஹரி, மோகனம் போன்ற ஒத்த சாயலைப் பெரும்பாலும் கொண்டிருக்கக்கூடிய இராகங்களை அடுத்தடுத்துப்பாடுவதை தவிர்ப்பது நல்லது.

சில கலைஞர்கள் கனகாங்கி, சலநாட, நாசிகாபூஷணி போன்ற விவாதி மேளங்களை விரும்பி, பிரதான உருப்படியாகத் தெரிவுசெய்து விவகாரம் பண்ணுவர், சில கலைஞர்கள் அபூர்வ இராகங்களை எடுத்து விஸ்தாரமாகப்பாடுவார்கள். இது அவரவர் இசை ஆற்றலைப் பொறுத்து சிறப்பாக அமையலாம். ஆனால் கேட்கின்ற சபை இத்தனை நுட்பங்ளை இனம்கண்டு இரசிக்குமா என்பதனை ஆற்றுகையாளர் இனம் கண்டு தன்னுடைய படைப்பினை சமர்ப்பித்தல் அவசியம். இன்றேல், ஆற்றுக்கிறைத்த நீராகிப்போய்விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உருப்படிகளுடைய தாளங்களின் தெரிவு

உருப்படிகளுடைய தாளங்களுடைய தெரிவிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். வேறுபட்ட தாளங்களிலே உருப்படிகள் தெரிவு செய்யப்படுகின்ற பொழுது பெறுகின்ற அனுபவம் வேறுபட்டதாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக இசைக்கச்சேரியின் முதலாவது உருப்படி ஆதி தாளத்திலே அமையப்பெகின்றதாயின் இரண்டாவது உருப்படி கண்ட சாபு, அல்லது மிஸ்ரசாபு தாளத்திலே அமைந்தால் கச்சேரி எடுப்பாக ஆரம்பிக்கும்.

தொடர்ந்து ரூபக தாள உருப்படியினைத் தெரிவுசெய்யலாம். கர்நாடக இசை உலகிலே பெரும்பாலும் ஆதி தாளத்திலமையப் பெற்ற உருப்படிகளே வழக்கில் இருக்கின்றன. அனேக வாக்கேயகாரர்கள் ஆதி தாளத்திலே பல்லாயிரக்கணக்கான உருப்படிகளை ஆக்கியிருக்கின்றார்கள். ஆகவே ஆற்றுகையாளனுக்கான உருப்படித் தெரிவுக்குரிய தளம் பெரும்பாலும் ஆதிதாளம் சார்ந்தே இருக்கின்ற அதேவேளை அவற்றுளிருந்து உருப்படிகளை வேறுபாடுகளோடு தெரிவு செய்வது என்பது சவாலான ஒரு முயற்சிதான். இருந்தாலும் இந்த உருப்படிகளுள் எடுப்பிடம் வேறுபட்ட உருப்படிகளைத் தெரிவு செய்கின்ற வகையிலே தன்னுடைய நோக்கத்தைத் திறமையாகப் பூர்த்திசெய்துகொள்ளமுடியும்.

வேறுபட்ட தாளங்களிலே உருப்படிகளைத் தெரிவு செய்கின்ற பொழுது பெறுகின்ற சுகானுபவம் சிறப்பானதாக அமைகின்ற அதே சமயம் மிருதங்கக்கலைஞருக்கும் அவருடைய முழுமையான திறமையினை வெளிப்படுத்தவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க முடிகிறது.

### கூட்டுப்படைப்பாக இசைக்கச்சேரி

ஒரு இசைக்கச்சேரியின் முதன்மைப்பாத்திரம் பிரதான கலைஞராக இருந்தாலும் பக்கவாத்தியக் கலைஞர்களுடைய அனுசரணை, நிகழ்வின் வெற்றிக்குப்பலம் சேர்க்கின்றது. இசைக்கச்சேரி என்பது ஒரு கூட்டுப்படைப்பு. ஒவ்வொரு கலைஞரும் இசைப்பிரவாகத்துள் மூழ்கி முக்குழித்துப் படைக்கின்ற கூட்டுப் படைப்பிலேயே இசைக்கச்சேரி சிறக்கின்றது. இந்த உண்மையினை மேடைக்கலைஞர்கள் புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. பிரதான கலைஞர், பக்கவாத்தியக்கலைஞர்களை விட உயர்ந்தவரென்றோ, பக்கவாத்தியக்கலைஞர்கள் பிரதான கலைஞர்களிலும் நிகழ்வுகளுக்கு முக்கியமானவர்களென்றோ மனதிலே எண்ணம் கொள்ளும் பட்சத்தில், கச்சேரியானது இனிமையிழந்து “கயிறிழுத்தல்“ நிகழ்வாகவே இறுதியிலே அமைய வாய்ப்புக்கள் ஏற்படும். இசைக்கச்சேரிகளில் இணைகின்ற வாத்தியக்கலைஞர்களுடைய அனுசரணையில் தான் பிரதான கலைஞருடைய அளிக்கை சிறப்புறுகின்றது. அந்த உண்மையை உணர்ந்தவர்கள் பக்கவாத்தியக் கலைஞர்களை அனுசரணைக்கலைஞர்கள் என்று குறிப்பிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கச்சேரியிலே பிரதான கலைஞர் பக்கவாத்தியக்கலைஞர்களுடைய திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இராக ஆலாபனை, கற்பனை ஸ்வரப்பகுதிகள், நிரவல் பகுதிகள் போன்ற மனோதர்மப் பகுதிகளில் வயலின் கலைஞருக்கும், தனியாவர்த்தனம், அல்லது கீர்த்தனைப் பகுதிகளுக்கிடையிலான வேளைகளில் சிறப்பாக மோராக்களை வாசித்துக்கொள்ள மிருதங்கக்கலைஞருக்கும் சந்தர்ப்பங்களைக் கொடுத்தால் கச்சேரி சிறப்பாக, பலமாக அமையும்.

மேலாக இசைக்கச்சேரி ஆற்றுகைக்கு முன்னதாகவே பக்கவாத்தியக்கலைஞர்களுக்கு தன்னுடைய திட்டம்பற்றி பிரதான கலைஞர் தெரிவித்துக்கொள்வது நிகழ்ச்சி சிறப்பாக அமைவதற்கு உதவியாக இருக்கும். அதாவது நிகழ்ச்சிக்கான ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து பிரதான கலைஞர் இந்நிகழ்வுக்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வதற்கான கால அவகாசம் கிடைக்கின்றது. ஆனால் பக்கவாத்தியக்கலைஞர்களுக்கு இறுதி நேரங்களிலே நிகழ்வின் விபரங்கள் தெரியப்படுத்தப்படுகின்ற பொழுது, அல்லது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் அரங்கிலே அவர்கள் இணைகின்ற பொழுது பக்கவாத்தியக்கலைஞர்களுக்கு முழுமையான பங்களிப்பினை நிகழ்வுக்கு பலமாக வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே ஒத்திகை பார்த்தல், அல்லது கலந்து பேசுதல் மூலம் ஆற்றுகைக்கு முன்னராகவே தன்னுடைய தீர்மானங்கள் பற்றி பிரதானகலைஞர் மற்றைய இணைக்கலைஞர்களோடு பகிர்கின்ற பட்சத்திலே அவர்கள் தம்மைத் தயார்ப் படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அவர்களுடைய சிறப்பான அனுசரணை நிகழ்வை சிறக்க வைக்கின்றது.

**நேரத்தைத்திட்டமிடல்**

இவை தவிர வெற்றிகரமான ஒரு இசை நிகழ்ச்சியைப் படைப்பதற்கு குறித்த நேரத்திலே நிகழ்வை ஆரம்பிக்கவும், உரிய நேரத்திலே நிகழ்வை நிறைவுசெய்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தம்முடைய பணியினை நேர்த்தியுடன் செய்வதற்கும் இடையூறு விழைவிக்காத வகையிலே நிகழ்வை நிகழ்த்திக்கொடுக்கவேண்டும்.

ஆற்றுகைக்கு வழங்கப்பட்ட நேரத்துக்கு அமைவாக தன்னுடைய பாடல்களைத் திட்டமிடவும், பக்கவாத்தியக்கலைஞர்களுக்கான நேரங்களை ஒதுக்கி வழங்கவும் முறையான திட்டமிடல் அவசியமாகின்றது. சில இசைநிகழ்ச்சிகளில் குறித்த நேரம் நிறைவுபெற்றதன் பின்னரும் திரை மூடப்படுவதற்கு தயாராகின்ற பொழுது மற்றுமொரு கீர்த்தனத்தை ஆற்றுகையாளர் புதிதாக ஆரம்பிக்கின்ற பொழுது ஏற்பாட்டாளர்களும், சபையோரும் சங்கடத்துக்குள்ளாகும் அவலங்களைத் தவிர்க்க முயற்சிக்கவேண்டும்.

நிகழ்வு ஆரம்பிப்பதற்கு உரிய நேரத்திலே குறித்த இடத்தையடைந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டபடி நிகழ்வுகளை ஆரம்பிக்கவும், நிறைவுசெய்யவும் அனுசரணையாக செயற்படுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**தொகுப்பு**

ஆக, இசை ஆற்றுகை என்பது வெறுமனே பாடகர் தனக்குத் தெரிந்தவற்றை மேடையிலே பாட, சபையோர் ஏனோ தானோ என்று அவையினை நிரப்பிவிட்டுச் செல்லும் ஒரு நிகழ்வல்ல.

இசை என்பது மனங்களை சாந்தப்படுத்துவது, மனங்களுடைய இறுக்கங்களைத் தளர்விப்பது. இசை நிகழ்ச்சிகள் எங்கு நிகழ்ந்தாலும் அடிநாதமாக இருக்கின்ற நோக்கம் இதுவாக இருத்தல் அவசியம். அப்போதுதான் இசை தனக்குரிய பணியை சமூகத்திற்குச் சிறப்பான முறையிலே செய்யமுடியும். சிறுசிறு விடயங்களிலே கவனம் செலுத்தாமல், கவனயீனமாக, இசைக்கச்சேரி என்பது சில பாடல்களைப்பாடுவது, அல்லது நான் பாடுவதைத்தான் சபையோர் கேட்கவேண்டும் என்கின்ற எண்ணப்பாடுகளோடு அளிக்கைகள் அரங்கேறுகின்ற பொழுது வெறுமனே இரசனையற்ற நிகழ்வுகளாக கடந்த போகின்றன.

அதேநேரம் குறுகிய கணப்பொழுதுகளாயிருந்தாலும் சபையினை மதித்து, அவர்களுடைய இரசனையின் போக்கறிந்து, தன்னுடைய பக்கவாத்தியக்கலைஞர்களை நிகழ்வின் அனுசரணைக்கலைஞர்களாகக் கருதி மிகக்கவனத்தோடு திட்டமிட்டு முன்னெடுக்கின்ற அரங்கஅளிக்கைகள் காலந்தோறும் பார்வையாளர் மனங்களிலே ஆழப்பதிந்த, மனநிறைவுக்குரிய ஆற்றுகைகளாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**முதுநிலை விரிவுரையாளர்,**
**இசைத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை யாழ்ப்பாணத்தில் படிக்கப்படுகின்றது பயிலப்படுவதில்லை

**தா. சனாதனன்**

1970களில் அதிகரித்த அளவில் யாழ்ப்பாணத்து நகர உயர் நடுத்தரவர்க்கத்திடம் காணப்பட்ட சாஸ்திரீயக் கலைகளாக அறியப்பட்ட கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் கற்பதற்கான நாட்டமும் அவற்றை அரங்கேற்றுவதற்கான அவாவும் இன்று புலம்பெயர் தமிழர்களையும் ஆக்கிரமித்துள்ளது. இது பல தென்னிந்திய இசை-நடன ஆசிரியர்களை தொழில் நிமித்தம் இந்த நாடுகளை நோக்கிப் புலம் பெயரச் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஈழத் தமிழ்க் குடும்பங்களுடன் சில மாதங்களைக் கழிக்க நேர்ந்த தமிழக ஓவியர் ஒருவர், தமிழ்நாட்டுடன் ஒப்பிடமுடியாத அளவிற்கு ஈழத் தமிழரிடம் பரவியுள்ள கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் கற்றுக்கொள்ளும் விசித்திர மோகத்திற்குப் பின்னாலுள்ள நோக்கங்களைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களிடம் இப்போக்குப் பெரிய அளவில் காணப்படுவதில்லை என்பது இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டும். புலம்பெயர் தேசங்களில் தமிழ் தெரியாத அல்லது தெரிந்துகொள்ள ஊக்குவிக்கப்படாத குழந்தைகள் கூட இக்கலைப் பாடங்களைக் கற்றுக்கொள்ள அவர்களின் பெற்றோர்களால் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதில் விசித்திரம் என்னவென்றால் பெரும்பாலான பெற்றோர்களுக்குத் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் கலைஞர்களாக வருவது பற்றியோ இக்கலைகளைத் தொழில்முறையாகப் பயில்வது பற்றியோ எந்தவித விருப்பமோ இலட்சியமோ கிடையாது என்பதுதான். இதைப் புலம்பெயர் நாடுகளில் தமது அடையாளப் பேணுகையாகப் பெரும்பாலானவர்கள் கருதுவார்களேயானால் இவற்றைத் தமிழ்ப் பண்பாட்டு அடையாளமாக இவர்கள் கருதக் காரணம் யாது? இந்த நம்பிக்கையைக் கட்டமைத்த சமூக மற்றும் வரலாற்றுக் காரணிகள் எவை? இப்போக்கு ஏன் ஓவியம், சிற்பம், கட்டடம், நாடகம் போன்ற துறைகள் சார்ந்து நிகழவில்லை? கலையார்வம் தான் காரணம் என்றால் மற்றைய இசை வடிவங்களையும் ஆற்றுகை வடிவங்களையும் கற்கும் வாய்ப்பு குடிபெயர்ந்த நாடுகளில் தாராளமாக இருந்தும் அவற்றைவிட்டுக் கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் இவர்கள் ஏன் அரும்பாடுபட்டுத் தேடுகிறார்கள்? போன்ற வினாக்கள் ஓவிய நண்பரின் அவதானங்களிலிருந்து மேற்கிளம்பின.

இந்த அவதானங்களும் கேள்விகளும் புலம்பெயர் ஈழத்தவர்களுக்கு மட்டுமல்லாமல் இன்றைய யாழ்ப்பாணத்துக் கலை நடைமுறைகளுடனும் பொருந்திப் போகின்றன. வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த முன்னைய அரங்கேற்றங்களை ஞாபகமூட்டும் பல நிகழ்சிகள், 2002இல் சமாதான உடன்படிக்கைக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அதிகரித்து வந்திருக்கின்றன. புலம் பெயர்ந்தவர்கள் அரங்கேற்றம் செய்ய யாழ்ப்பாணம் வருவதும் இந்தியக் கலைஞர்கள் அரங்கேற்றங்களுக்கு அதிதிகளாக இங்கு அழைக்கப்படுவதும் அத்துடன் வெளிநாடுகளில் நிகழும் அரங்கேற்றங்களைச் சிறப்பிக்க இங்கிருந்து நடன-இசை ஆசிரியர்களும் அணிசேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களும் அழைக்கப்படுவதும் வழமையாகியுள்ளது. பெருந்தொகையான பண முதலீட்டுடனும் சமூக பிரபலங்களுடனும் உறவினர், நண்பர் கூட்டத்தினரோடும் நடைபெறும் பெரும்பாலான இந்த நிகழ்சிகளுக்குப் பின்னால் இருப்பது கலையார்வமே என வாதிடல் கடினமானது. ஏனெனில் இவர்களின் கலைவெளிப்பாட்டை தொடர்ந்து அளிக்கை செய்யும் கச்சேரிகளோ கலைத் தேடல்கள் சார் விவாதங்கள் நடைபெறும் கருத்தரங்குகளோ அல்லது இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெறும் சென்னை இசைவிழா போன்றவற்றை நேரடியாகக் கேட்பதற்கான பயணங்களோ இவர்களில் பெரும் பாலானவர்களால் மேற்கொள்ளப்படுவதில்லை. இவை வர்க்க அபிலாசைகளை காட்சிப்படுத்தும் புதிய பண்பாட்டு மூலதனங்களாகவும் குடும்பச் சடங்குகளாகவுமே தோன்றுகின்றன.

இந்தப் போக்குக்குச் சமாந்தரமாகக் கர்நாடக இசையையும் பரத நாட்டியத்தையும் பிரத்தியேகமாகவும், பல்கலைக்கழகத்திலும், கல்வியியல் கல்லூரிகளிலும், கற்போரது எண்ணிக்கை நம்பமுடியாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இக்கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் தான் என்ன? இவற்றினூடு எத்தனை தொழிலாண்மை சார் கலைஞர்கள் அறியப்பட்டுள்ளார்கள்? எத்தனை கலை விமர்சகர்கள், கோட்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் உருவாகியுள்ளார்கள் என்ற கேள்விகள் தொடர்ந்து இருப்புச் செய்கின்றன. சங்கீத நடன ஆசிரியர்களுக்கும் வகுப்புகளுக்கும் எமது சமூகத்தில் தொடர்ந்து கிராக்கி நிலவினாலும் தரமான உள்ளூர்க் கச்சேரிகளை அனுபவிக்கக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவு என்பதுடன் தரமான கச்சேரிகளைக் கேட்க வருபவர்களின் எண்ணிக்கை குறிப்பிடும்படியானதாகவோ தொடச்சியானதாகவோ இல்லை என்பதும் கவனிப்புக்குரியது. இந்த எதிரெதிரான யதார்த்தங்களுக்கான காரணம் என்ன? கர்நாடக இசையிலும் பரத நாட்டியத்திலும் பயிற்சியளிக்கப்படும்போது அவற்றை "நுண்கலைகள்" என்றும் அவற்றை "இறைவனே அனுக்கிரகம் செய்தார்" என்றும் அவை "தெய்வீகமானவை", "ஆத்மீகம் சார்ந்தவை", "நீண்ட நெடிய தமிழ் மரபின் சுட்டிகள்" என்றும் நம்பும் இசை- நடன ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் அவற்றைத் தொடர்ந்து பயில ஏன் முயற்சியே எடுப்பதில்லை? கலைப் பயிற்சியின் முடிவில் கலைஞராவதற்கான கனவும் முயற்சியும் ஈடுபாடும் எப்படிக் காணாமல் போகிறது? தமது பிள்ளைகள் இசை-நடனப் போட்டிகளில் வெற்றிபெறும் போதும் அரங்கேற்றம் செய்யும்போதும் பெருமையும் உவகையும் அடைகிற பெற்றோர்கள் ஏன் பிள்ளைகளின் தொழில்சார் தெரிவுகளாக இக்கலைப் பயில்வுகளை ஏற்றுக்கொள்வதில்லை? அவ்வாறு ஏற்றுக்கொண்டாலும் அது அவற்றுக்கு பின்னால் கிடைக்கக்கூடிய அரச வேலைவாய்ப்பு சார்ந்ததாகும். இந்த இடைவெளியில் "ஆலை இல்லா ஊரில் இலுப்பம் பூ சக்கரை" என்பது போல இக்கலை வடிவங்களைக் கற்பிப்பவர்களும் கற்பவர்களும் பொதுவெளிகளில் கலைஞர்களாக விழிக்கப்படுகின்றனர். வட இலங்கை சங்கீத சபையின் இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு "கலாவித்தகர்" என்ற பட்டமும் வழங்கப்படுகிறது. இது கலைஞனை யாழ்ப்பாணப் பயில்வினூடாக அல்லாமல் பட்டத்தாலும் பயிற்சியாலும் மட்டும் இனங்காண்பதை எடுத்துக்காட்டுகிறது.

இசையையும் நடனத்தையும் யாழ்ப்பாணத்தவர்கள் ஓடி ஓடிக் கற்றாலும் அவர்களின் பொதுவான இரசனை மட்டம் அதிகரித்துள்ளதா என்பது அடுத்து மேலெழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவாகும். தென்னிந்தியாவின் இசை மற்றும் நடன வளர்ச்சியில் மதப்பண்பாடு முக்கிய பங்கு வகித்து வருகிறது. இன்று யாழ்ப்பாணத்துக் கோயில்களில் தேவாரத்தைப் பண்ணுடன் பாட இவ்வாறு இசையை ஓடி ஓடிக் கற்றவர்கள் அதைப் படித்துப் பரீட்சை எழுதியவர்கள் பட்டம் பெற்றவர்கள் அரச தொழில் பெற்றவர்கள் யாரும் முன் வருவதில்லை. பெரும்பாலான சந்தர்பங்களில் சங்கீதம் கற்காதவர்கள் அபசுரத்தில் இத் தேவாரங்களை மிகத் துணிவாக பொது விழாக்களில் ஒலிபெருக்கிகளில் பாடுகிறார்கள். இவ்வாறான நிலமைகளைப் புலம்பெயர் நாடுகளிலும் அவதானிக்க முடிந்தது. இதை எமது சமூகத்தின் இரசனை மட்டத்தை எடுத்துக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக ஏன் கருதமுடியாது?

சாஸ்திரிய இசையில் தூய இராக அலாபனைக்கு நிறைய முக்கியத்துவம் உண்டு. ஒரு கலைஞனின் இசை ஞானம் என்பது இதனூடாக வெளிப்படுத்தப்படுவதோடு மதிப்பிடவும் படுகிறது. யாழ்ப்பாணத்து நாதஸ்வரக் கலைஞர்கள் சிலருக்கு தென்னிந்தியாவில் பெரிய அங்கீகாரமும் ரசிகர் கூட்டமும் உண்டு. இவர்கள் தென்னிந்தியாவில் நீண்ட இராக ஆலாபனைகளைச் செய்தாலும் யாழ்ப்பாணத்துக் கச்சேரிகளில் இராக ஆலாபனைக்கான நேரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அந்த இடத்தைச் சினிமாப் பாடல்கள் எடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது. ஆக மொத்தத்தில் இவர்கள் அவர்களின் இசை ஞானத்துக்காக தென்னிந்தியாவிலும் அச்சொட்டாக சினிமாப் பாடல் நகல் எடுப்பிற்காக யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப் படுகிறார்கள். இதே போக்கையே தென்னிந்தியப் பிரபல கர்நாடக சங்கீதக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் கச்சேரி செய்யும் போதும் பின்பற்றுகிறார்கள். அதாவது நீண்ட இராக ஆலாபனைகளுக்குப் பதில் துக்கடா தமிழ் பாடல்களால் கச்சேரியை நிரப்புகிறார்கள். அதற்கே அதிக கரகோஷமும் கிடைக்கிறது. இப்போக்கானது இரசிகத்துவம் பற்றி எதைச்சொல்கிறது? யாழ்ப்பாணத்தில் இசையை இரசித்தல் என்பது பாட்டுக்கேட்பதாக மாறிவிட்டுள்ளதா? தெரிந்த பாட்டை மீள ஒப்புவித்தல் இசையனுபவமாக மாறிவிட்டுள்ளதா? மேலும் சினிமாப் படல்களைப் பாடிப் பிரபல்யமான தென்னிந்திய கர்நாடக இசைக் கலைஞர்களின் இசைக் கச்சேரிகளுக்கு திரளும் கூட்டம் சினிமா மூலம் அறியப்படாத சிறந்த இசைக் கலைஞர்களுக்குக் கூடும் கூட்டத்திலும் அதிகமாகக் காணப்படுகிறது. இதுவும் எமது இரசனை சாஸ்திரிய இசைக்கல்லாமல் சனரஞ்சக இசைக்கே வசப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் ஈழத் தமிழர்களின் அழைப்பில் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் கச்சேரி செய்யும் பெரும்பாலான இந்திய இசை மற்றும் நாட்டியக் கலைஞர்களிடமும் ஈழத் தமிழர்களின் கலை ரசனை குறித்து உயர்ந்த அபிப்பிராயங்கள் இல்லை என்பதை சில உள்வட்ட கலந்துரையாடல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. இந்த நம்பிக்கைக்கும் நடைமுறைக்குமான குழப்பத்தை எவை கட்டமைக்கின்றன. இந்த அகமுரண்பாட்டை யாழ்ப்பாணத்தவர் எவ்வாறு சமன் செய்து கொள்கிறார்கள்?

**யாழ்ப்பாணத்தவரிடையில் நுண்கலை என்ற நம்பிக்கை**

பாரம்பரிய சமூகங்களில் கலை கைவினை என்ற பிரிப்போ நுண்கலை (Fine Arts) பயன்பாட்டுக்கலை (Functional art) என்ற பாகுபாடோ, உயர்கலை (High Art) தாழ் கலை (Low Art) என்ற அடுக்கமைவோ காணப்படவில்லை. கலைகைவினை என்ற பிரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் ஐரோப்பாவில் கலைப் பட்டடைகளிலிருந்து தனிமனிதப் படைப்பாளிகளை வேறுபிரிக்கப் பயன்படுத்தப்பட்டது. இது கலை வெளிப்பாட்டினை மேதைக் கலைஞனின் ஆத்மீக- அழகியல் வெளிப்பாடாகவும் கைவினையை நாளாந்த புளங்குபொருள் சார்ந்ததாகவும் வரையறுத்தது. மனிதத் திறன்கள் எல்லாம் கலையாகக் கொள்ளப்பட்ட பின்புலத்தில் இன்று கலையென இனங்காணப்படும் படைப்பாற்றலை அல்லது அழகியல் பண்டத்தைப் பிற மனித நடவடிக்கைகளிலிருந்து வேறு பிரிக்கும் முயற்சியில் " Fine Arts " என்ற பதம் முக்கியமானது. பொதுத் திறன்களை அழகு சார் பயன்பாட்டுத் திறன்களிலிருந்து வேறு பிரிக்க இப்பதம் பயன்படுத்தப்பட்டது. Fine arts என்ற பதப் பிரயோகத்தை முதல் முதலாகக் கையாண்டவர்களுள் ஒருவராகப் பிரஞ்சு தத்துவவியலாளரான சார்ள்ஸ் பற்றியுக் (Charles Batteux) கருதப்படுகிறார். அவர் 1747 இல் பிரஞ்சு மொழியில் Beaux Art என்ற பதப் பிரயோகத்திற்கு நிகராக நுண்ணயமான, அபரிமிதமான, நுணுக்கமாக உருவாக்கப்பட்ட அழகையும் நல்ல உணர்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட கலையைக் குறிக்க Fine மற்றும் Arts என்ற வார்த்தைகளை ஒன்றிணைத்தார். அதேவேளை கலைகளில் முடிவானதும் நிறைவானதும் என்ற இன்னொரு அர்த்தமும் அதற்குண்டு. மேலைத்தேயத்தில் நாளாந்த பயன்பாடு அற்ற அல்லது உயர் கலை வடிவங்களைக் குறிக்க Fine Arts என்ற இப்பதம் அலங்காரக் கலை அல்லது பிரயோகக் கலை என்பதற்கான எதிர்ப் பதமாக உபயோகிக்கப்பட்டது. இப்பதம் பொதுப் பயன்பாட்டில் ஓவியம், சிற்பம் மற்றும் கட்டடக்கலையைப் பற்றியது எனினும் கவிதை மற்றும் இசையையும் இது உள்ளடக்கியது. சார்ல்ஸ் பற்றியுயக்ஸைத் தொடர்ந்து டி'அலம்போர்ட் ( D'Alembert) என்ற தத்துவஞானி நுண்கலைகளை ஓவியம், சிற்பம், கட்டடம், கவிதை, இசை என்பதாகப் பட்டியலிட்டார். இவை இங்கிலாந்தில் "பஞ்ச கலைகள்" ("Five arts") என்றதாக அறியப்பட்டன. ஆங்கில அகராதிகள் Fine Arts என்பதைப் படைப்பாக்கமாகவும் குறிப்பாகக் கற்பனை, அழகியல் மற்றும் அறிவு சார் உள்ளடக்கத்திற்காக அடிப்படையில் நயக்கப்படுகின்ற காண்பியக்கலை என்பதாக அர்த்தம் கொள்கின்றன.

இப்பதங்களும் அவை சார்ந்த கருத்துருவும் தென்னாசியாவிற்கு அறிமுகமாகிய போது அது "லலித கலா" என்று சமஸ்கிருதத்திலும் "நுண்கலை" எனத் தமிழிலும் வழங்கப்படலாயிற்று. நவீன மற்றும் சமகால இந்தியாவில் இப்பதங்களின் பாவனையை நோக்கும் போது லலித கலா என்பது காண்பியக் கலைகளைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிலும் நுண்கலை என்பது ஓவியம், சிற்பம் சார்ந்தே பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் நுண்கலைக் கல்லூரி, நுண்கலைப் பட்டம் என்பன பொதுவாகக் காண்பியக் கலை சார்ந்தனவே. இருப்பினும் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நுண்கலை என்றால் முதல் ஞாபகத்திற்கு வருவது இசையும் நாட்டியமுமே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இசை மற்றும் நடனத்துறைகளில் தேர்ச்சியடையும் மாணவர்களுக்கு நுண்கலைமாணி பட்டத்தையே வழங்குகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நுண்கலை என்ற பதப்பிரயோகம் 19ஆம் 20ஆம் நூற்றண்டுகளில் அது கட்டமைத்த வர்க்க, வர்ண அடுக்கமைவு காரணமாக கடும் விமர்சனத்துக்குள்ளானது.

நுண்கலை என்ற எண்ணக்கருவும் அத்துடன் இணைந்த பாகுபாடு அல்லது மேலாதிக்கச் சிந்தனை எமக்கு காலனியத்துடன் தான் அறிமுகமாகியது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகத்தடன் காலனியவாதிகளுக்குப் பரீட்சயமற்ற சுதேசிய கலைவெளிப்பாடுகளும் கலை ஊடகங்களும் கைவினைகளாகவும் கீழ்நிலைக் கலைகளாகவும் நோக்கப்பட்டன. இந்த சிந்தனையை வளர்ப்பதாகவே காலனியக் கல்வியும் அமைந்திருந்தது. இந்தியத் துணைக்கண்டத்தில் காலனிய வாதத்துக்கெதிராகத் தேசிய வாதமும் கீழைத்தேயவாதமும் திரட்சியடைந்த போது அவை மேலைத்தேய அடையாளத்துக்கு நிகராக சுதேசிய அடையாளத்தைக் கட்டமைக்க முயன்றன. இந்த அடையாளம் பற்றிய தேடலில் நுண்கலைகள் பற்றிய கருத்தாடலும் பயில்வுகளும் முக்கியமானவை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலேயர்கள் அமைத்த காண்பியக் கல்வி நிறுவனங்கள் பாரம்பரிய கலைப் பயில்வில் நேரடியாகத் தலையீடு செய்த நிலையில் தேசியவாதிகளின் பண்பாட்டு அடையாளம் பற்றிய தேடல்கள் காலனியச் செல்வாக்கு அற்ற இசை மற்றும் நாட்டிய வடிவங்களில் மையங்கொண்டிருந்தன.

அந்த வகையில் கர்நாடக சங்கீதத்தின் அளிக்கை முறையில் உருவான மாற்றமும் சதிரிலிருந்து பரத நாட்டியத்தின் மறுவுருவாக்கமும் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து நோக்கப்படவேண்டியது. சுவாமி விவேகானந்தர், சுவாமி அரவிந்தர், ஆனந்தக் குமாரசுவாமி போன்றவர்கள் இந்தியக் கலைகளை மேலைத்தேயக் கலைக்களுக்கு நிகராக நிறுவும் முயற்சியில் அவற்றின் ஆத்மீகப் பண்பினை முன்னிறுத்தினார்கள். அவற்றின் மதப்பின்னணியை எடுத்துக்காட்டி அவற்றை அபௌதீகம் சார்ந்ததாக நிறுவினார்கள். மேலும் இசை வேளாளர்கள் மற்றும் தேவதாசிகளினால் பயிலப்பட்ட இசையையும் நாட்டியத்தையும் பிராமணர்கள் கையிலெடுத்தபோது அவற்றுக்கு மேலதிக ஆத்மீகவாத அர்த்தத்தை வழங்கி பக்தி என்ற புதிய இரசத்தை உருவாக்கி அவற்றைப் “புனிதப் படுத்தினார்கள்". எனவே மேலைத்தேயத்திலிருந்து அறிமுகமான நுண்கலை என்ற பதமும் கருத்துருவும் காலனிய சுதேசிய முரண்பாட்டில் அபௌதீக அர்த்தத்தை ஏற்பதினூடு சுதேசிய பாரம்பரிய அடையாளமாக மாறிக்கொண்டது. அந்த நிலை மாற்றத்தில் கிராமிய வெளிப்பாடுகளும் பறை அறைதல் போன்ற சமூகத்தில் கீழ்நிலைப்படுத்தப்பட்டவர்களின் வெளிப்பாடுகளும் உரிய கவனத்தைப் பெறாமல் எமது தேசியவாதிகளாலும் கீழைத்தேயவாதிகளாலும் நழுவவிடப்பட்டன. இதனூடு நுண்கலைகள் என்று இனங்காணப்பட்ட உயர் வர்க்க நுகர்வை அல்லது பயில்வை அடிப்படையாகக் கொண்ட “தொல்சீர்“ வடிவங்களாக சட்டகமிடப்பட்ட கர்நாடக சங்கீதமும் பரதநாட்டியமும் அதிகாரத்தினதும் அந்தஸ்தினதும் சுட்டிகளாக உருவாயின. மறுபுறத்தில் ஓவியம், சிற்பம், கட்டடம் என்பன காலனியத்துக்கு முந்தைய பண்பாட்டின் சுட்டிகளாகவும் தமிழரின் அடையாளத்தையும் தொன்மையை பறைசாற்றுவனவாகக் கொண்டாடப்பட்டாலும் அவை இசையும் நாட்டியமும் பெற்றுக்கொண்ட முதன்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நுண்கலை வடிவங்களாக இவை அதிகம் பிரபல்யம் அடையவில்லை. இதற்கு இத்துறைகளில் நிகழ்ந்த காலனிய தலையீடும் நேரடியான மேலைத்தேயக் கலப்பும் காரணமாகியது. அத்துடன் இதை பிராமணர்களைப் போன்ற சமூகத்தின் மேல் மட்டத்திலுள்ளோர் பயில முன்வராததும் இன்னொரு காரணமாக நோக்கப்படலாம். எனவே ஒரு சமூகம் நுண்கலைகளுடன் தன்னை அடையாளப்படுத்த எடுக்கும் முயற்சிகளை அது அதிகாரத்தைப் பெற எடுக்கும் முயற்சிகளிலிருந்து வேறுபிரிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணத்தில் நுண்கலையின் தாபிப்பு**

சென்னையில் 1927 மார்கழி மாதம் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் அமர்வின் வெளித் தோன்றலாகச் சென்னை சங்கீத அக்கடமி ( Madras Music Academy ) ( சங்கீத வித்வத் சபை என தமிழில் அழைக்கப்பட்டது) 1928இல் தாபிக்கப்பட்டது. இது கர்நாடக இசையின் தரத்தை நிர்ணயிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. 1929ஆம் ஆண்டு வருடாந்த இசைக் கருத்தரங்கை இது ஏற்பாடு செய்தது. அதுவே ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழும் மார்கழி இசைக் கச்சேரிக்கு வழியமைத்துக் கொடுத்தது. பரதநாட்டிய முன்னோடிகளில் ஒருவரான கிருஸ்ணய்யர் சென்னை சங்கீத அக்கடமியில் ஆற்றிய நாட்டியக்கச்சேரிகள் பரத நாட்டியத்திற்கு சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதில் சீரிய பங்கு வகித்தன. 1922இல் கர்நாடக இசை விற்பனரான பேராசிரியர் சாம்பமூர்த்தியைத் தலைவராகக்கொண்டு சென்னைப் பல்கலைக்கழக இராணிமேரி கல்லூரியில் இசைத்துறை தாபிக்கப்பட்டு முதன்முதலாகக் கர்நாடக சங்கீதம் பல்கலைக்கழகக் கற்கை நெறியாக உள்வாங்கப்பட்டது. இதனூடு கோயில்கள், மடங்கள் மற்றும் அரச அவையை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த தென்னிந்திய இசை நவீன நிறுவன ரீதியான இடையீட்டினால் செவ்வியல் வடிவமாக நிலைமாறியதுடன் அது காலனிய எதிாப்பினதும் மீள் கண்டுபிடிக்கப்பட்ட பாரம்பரியத்தினதும் அடையாளமாக புதிய அர்த்தத்தை ஏற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து வந்த காலத்தில் கர்நாடக இசையில் தமிழ் மொழியின் இடம் அல்லது அடையாளம் சர்ச்சைக்குரியதாகி தனித் தழிழிசை இயக்கம் தோன்ற வழியேற்பட்டது. இங்கு இசைத்தலில் தமிழடையாளம் என்பதிலும் தமிழ் மொழி உருப்படிகளுக்கு அதிக முக்கியத்தவம் கொடுக்கப்பட்டது. சென்னை சங்கீத அக்கடமியின் பிரதானிகளில் ஒருவரான அண்ணாமலைச் செட்டியாரின் முயற்சியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசையானது பல்கலைக்கழக கற்கை நெறியாக 1940இல் மலர்வுகண்டது.

கிட்டத்தட்ட நானூறு வருட ஐரோப்பிய காலனிய ஆட்சியானது யாழ்ப்பாணத்தில் அரச அவையையும் கோயில்களையும் இல்லாதொழித்த நிலையில் கிராமத்து இசையிலேயே சமூகத்தின் இசைப் பேறு பேணப்பட்டிருக்கவேண்டும். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்திய இசைச் சூழலில் நிகழ்ந்துவந்த இசையின் பரவலாக்கத்தாலும் தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான போக்குவரத்துத் தொடர்புகளாலும் யாழ்ப்பாணத்துக் கலைச் சூழலானது வளம் பெற்றது. இசை நாடகக் குழுக்களும் பிரபல இசைக்கலைஞர்களும் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய ஆற்றுகைகள் இக்கலை வடிவங்களுக்கான நேரடிப் பரீட்சயத்தையும் இரசிகர்களையும் உருவாக்கியது. யாழ்ப்பாணத்தில் காலனிய எதிர்ப்புக்கும் உள்ளூர் மயவாக்கத்திற்கும் காலனிய இறக்கத்துக்கும்( decolonization) இந்திய பண்பாட்டு தொடர்பும் பாண்பாட்டு உசாவலும் வழிகோலியதாகக் கலைப்புலவர் நவரத்தினம் குறிப்பிடுவது இச்சந்தர்ப்பத்தில் ஞாபகத்தில் கொள்ளப்படவேண்டியது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரின் கலையில் தூய்மைவாதப் பிரச்சாரங்களின் பின்னணியில், நுண்கலைகள் சார் அணுகுமுறை மாற்றத்திற்கு 20ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நிகழ்ந்த தேசியவாத எழுச்சியுடன் சம்பத்தப்பட்ட கலை மறுமலர்ச்சி காரணமானது. இந்த மாற்றத்தின் கவிகளாக கலைப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினமும் அவரது மனைவி மகேஸ்வரிதேவியும் திகழ்ந்தார்கள். இவர்கள் 1930இல் உருவாக்கிய கலா நிலையத்தில் முதலாவது கர்நாடக இசைக் கச்சேரி இடம்பெற்றதாக நம்பப்படுகிறது. கலைப்புலவர் நவரத்தினம் சுதேசிய காண்பியக் கலைகள் பற்றி அதிகம் எழுதி வெளியிட்டிருந்தாலும் கலைப்பயில்வு என்ற நிலையில் கலாநிலையத்தின் செயற்பாடுகள் இசை சார்ந்தே இடம்பெற்றிருந்தன. மகேஸ்வரிதேவி தமிழ்நாட்டில் பிரபல சங்கீத மேதை பேராசிரியர் சாம்பமூர்த்தியிடமும் அதனைத் தொடர்ந்து இரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனிலும் சங்கீதம் கற்றார். யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, குருணாகல் போன்ற இடங்களில் கச்சேரிகளை நடாத்தியுள்ளார். குடும்பப் பெண்கள் மேடையேறாத காலத்தில் மேடைக் கச்சேரிகள் செய்து யாழ்ப்பாணத்து உயர் குடிகளின் கண்டனத்துக்குள்ளானார். தமிழரின் பண்டைய வாத்தியங்களில் ஒன்றான யாழை மீள வடிவமைத்து அதை 1936 இல் யாழ்ப்பாணத்தில் மீட்டினார். இதே ஆண்டு சுவாமி விபுலானந்தரின் யாழ் நூலும் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது என்பது இங்கு கவனத்துக்குரியது. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா சென்று இசை நடனத்துறைகளில் பயிற்சி பெற்ற முன்னோடிகளுக்குப் பின்னால் நவரத்தினம் தம்பதியினர் இருந்துள்ளதை அறியமுடிகிறது. இவர்களின் நடவடிக்கைகள் நுண்கலைகளை தேசியத்துடனும் தமிழடையாளத்துடனும் பிணைப்பதாக அமைந்திருந்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறையில் பயிற்சிபெற்றவர்களால் 1931இல் வட இலங்கை சங்கீத சபை உருவானது. இது யாழ்ப்பாணத்தில் அல்லது ஈழத்தில் இசையை முறைசார்ந்து கற்கவும் பரவலாக்கவும் எடுத்துக்கொண்ட முதல் முயற்சியாகப் பார்க்கப்படலாம். வட இலங்கை சங்கீத சபையினூடு இசைக்கல்வி பரவலாக்கப்பட்ட அளவிற்கு தரமான இசை பரவலானதா என்ற கேள்வி ஆய்வுக்குரியது. இதனைத் தொடர்ந்து உயர் சாதி சைவ தமிழ்ப் பெண்களின் நவீன பண்பாட்டு அடையாளத்தை கட்டமைக்கவென சேர் பொன்னம்பலம் இராமநாதனால் நிறுவப்பட்ட இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் 1940இல் இருந்து இந்திய ஆசிரியர்களால் இசை கற்பித்தல் ஆரம்பமானது. இது தொடர்ந்து வந்த காலத்தில் தையலைப்போல இசையை உயர் சாதிப் பெண்களின் அடையாளமாகவும் தகமையாகவும் மாற்றியது. இங்கு இசையானது பண்பாடு நிறைந்த சிறந்த குடும்பப் பெண்களாக மாணவிகளை வடிவமைக்கப் பயன்பட்டதே தவிர அவர்களை மேடைக் கச்சேரிகள் செய்யும் கலைஞர்களாக உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பரதம் இதைத் தொடர்ந்த காலப்பகுதியிலேயே அறிமுகமாகியது என்பதுடன் ஏற்கனவே சின்னமேளம் மற்றும் சதிர் பற்றிய மனப்பதிவுகள் இதற்கான தயக்கத்திற்குக காரணமாகலாம். 1960களில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இசைக் கல்லூரியானது 1975இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இராமநாதன் நுண்கலைக் கழகமாக தரமுயர்த்தப்பட்டது. அந்தவகையில் இன, சாதி, வர்க்க மற்றும் பால்நிலை சார் அடையாளக் கட்டமைப்புகளுடன் பின்னப்பட்டுவந்த நுண்கலைக் கல்வியானது இலவசக் கல்வியினூடாகவும் பல்கலைக்கழகக் கல்வியினூடாகவும் மேலும் பரவலாக்கப்பட்டது. கல்வியானது முன்னைய சாதிய அடையாளத்துக்குப் பதிலாக (நடுத்தர)வர்க்க அடையாளமாக நுண்கலையை மாற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

தென்னிந்தியாவில் பாரம்பரிய வாழ்க்கை முறையின் கையளிப்பில் செந்நெறிக் கலைகள் மிக முக்கியமாக இடம்பெற்றமையை எடுத்துக்காட்டும் கா.சிவத்தம்பி அது இலங்கைத் தமிழரிடையில் தென்னிந்திய உயர் சமூகமட்டத்தில் பெற்றிருந்த மதப்பண்பாட்டு முக்கியத்துவத்தினையுடையதாக இருக்கவில்லை என்கிறார். அதாவது இலங்கையில் குரலிசையானது சைவத் தமிழ் பண்பாட்டுச் சூழலில் வாழ்க்கை முறையுடன் பின்னிப்பிணைந்து கிடக்கவில்லை. தென்னிந்தியாவில் நிலவிய சைவ வைணவப் பாரம்பரியங்கள் "பாகவத" மரபொன்றினை வளர்த்தெடுத்திருந்தன. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த மத, இசை வளர்ச்சிகள் இதற்கு மேலும் வலுக்கூட்டின. இலங்கையில் இந்த நிலை இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இசை அல்லது நாட்டியம் தமிழ்ப் பண்பாட்டுணர்வுடன் தொடர்புபட்டவையாகவே அமைந்தன என சிவத்தம்பி வாதிடுகிறார். இதனூடு பாரம்பரியமாக இசை பயிலும் பறையர் மற்றும் இசைவேளாள சாதியினரைத் தவிர்த்து பிற சாதியினர் குறிப்பாக சமூகத்தில் மேல் நிலையிலுள்ளோர் செந்நெறியாக்கப்பட்ட பக்தி இசையைத் தமிழடையாளமாகத் தகவமைத்துக்கொண்டதை அவர் எடுத்துக்காட்டுகிறார்.


இப்பின்னனியில் சாஸ்திரிய இசையும் நாட்டியமும் அவற்றின் பயில்வு சார் அர்த்தத்தில் அல்லாமல் பண்பாட்டு மற்றும் அந்தஸ்து அடையாளங்களுக்காகப் போற்றப்படுகின்றன. தமிழ்நாட்டில் தொடர்ச்சியான பயில்வினூடாக குறிப்பாகப் பிராமணச் சமூகத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட பக்தி இரசமேற்றப்பட்ட சாஸ்திரிய கலை வடிவங்களை அவற்றிலுள்ள மேட்டுக்குடி பண்பாட்டு அடையாளத்துக்காக யாழ்ப்பாண நடுத்தரவர்க்கம் பயில்வு நீக்கம் செய்து தகவமைத்துக்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. வர்க்க மேல்நிலையாக்கம் அல்லது சாதி மறைப்பு போன்றவற்றின் அபிலாசைகளும் நவ பிராமணர்களாக தம்மைக்காட்டிக்கொள்ளும் முனைப்புகளும் தமிழ் பண்பாட்டு மரபுரிமை சார் கற்பனைகளும் இந்த நுண்கலை மோகத்தில் கலந்து போயுள்ளன. இதனால் நுண்கலைகள் அதாவது யாழ்ப்பாணத்தைப் பெறுத்தவரையில் கர்நாடக இசையும் பரதமும் பயிலப்படுவதாக அல்லாமல் கற்கப்படுவதாக மாறியுள்ளன. நுண்கலைகள் அவை தரும் ஆத்மார்த்த திருப்திக்காகவும் படைப்பாக்க அனுபவத்திற்காகவும் அல்லாமல் பல்கலைக்கழகப் பட்டத்திற்காகவும் அரச வேலை வாய்ப்புக்காகவும் தமிழ்ப் பண்பாடு மிக்க குடும்பங்களை உருவாக்க வேண்டியும் கற்கப்படுகின்றன அல்லது கற்பிக்கப்படுகின்றன. புலம்பெயர் சூழலில் அவர்கள் எதிர்நோக்கும் பண்பாட்டு ரீதியிலான அடையாளச் சிக்கலில் இருந்து வெளிவர ஒரு இலகுவான காட்சிப்படுத்தும் நடவடிக்கையாக இது அமைகிறது. இச்செயற்பாடுகளில் அடிப்படையில் காணாமல் போயுள்ளது கலை தான். அதாவது நுண்ணயமான, அபரிமிதமான, நுணுக்கமாக உருவாக்கப்பட்ட அழகையும் நல்ல உணர்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட அதன் அடிப்படை இயல்பும் அர்த்தமும் தான். இங்கு நுண்கலை சமூகத்தினதும் தனிநபரினதும் குறியீடு சார்ந்த செயற்பாடாக (symbolic action) மாறியுள்ளது. குறியீடு சார்ந்த செயற்பாடு என்பது செயன்முறை சார் தாக்கத்தைக் குறைந்தளவு கொண்டிருந்தாலும் முக்கியமான மாற்றத்தைக் குறிக்கிறது அல்லது ஒரு நோக்கத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்தும் அல்லது வெளிப்படுத்துவதாக தோன்றும் ஆனால் நிலவரத்தில் சிறிதளவே நடைமுறைசார் செல்வாக்குக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாட்டை இது குறிக்கிறது. யாழ்ப்பாணச் சமூகத்தில் குறியீட்டுச் செயற்பாடக அல்லது ஏட்டுச்சுரக்காயாக மாறிப்போயுள்ள கலைகளை அவற்றின் பயில்வு மற்றும் பகிர்வு சார் அர்த்தத்தில் மீட்டெடுப்பது தான் இன்று நம்முன்னாலுள்ள சவாலாகும். கலைகள் அவை தரும் அனுபவம் மற்றும் வெளிப்பாடு சார் பண்புகளுக்காக நுகரப்படுவதற்கான ஏது நிலைகளை உருவாக்க பரீட்சை வழிப்பட்ட கலைக் கல்வியும் கலை நிறுவனங்களும் தொடர்ச்சியான பயில்வை மையப்படுத்தி மறுசீரமைக்கப்படவேண்டும். கலையை கலையாகக் காணும் வழிமுறைகளும் நடைமுறைகளும் பிரித்துணரப்பட்டு வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

கலாநிதி. தா.சனாதனன்
காண்பியக் கலைஞர்
இருக்கைப் பேராசிரியர்-கலை வரலாறு
நுண்கலைத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

* ஈழநாடு 1.10.2004 இல் வெளியான நுண்கலை: யாழ்ப்பாணத்தவரின் நம்பிக்கையும் நடைமுறையும் என்ற கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க அணிசேர் கலைஞர்கள்

**மிருதங்கம் : திரு. சின்னையா துரைராசா**



நாடறிந்த மிருதங்க கலா வித்வானாகிய திரு.சின்னையா துரைராசா அவர்கள் மிருதங்கத்தில் இசைக்கலைமணி பட்டம் பெற்றவர். இவர் சங்கீதபூஷணம் திலகநாயகம் போல் தொடக்கம் இன்றைய இளம் சந்ததியினர் வரை மிருதங்கம் இசைத்து ஆயிரக்கணக்கான இசை, நடன அரங்குகளைக் கண்டவர். அத்தோடு தனது மாணவர்கள் பலரின் மிருதங்க அரங்கேற்றத்தை நிகழ்த்திக்காட்டியவர். தற்போது யா/கொக்குவில் இந்துக்கல்லூரியில் கற்பித்து வருகின்றார் நல்லைக் கந்தன் மீது மிகுந்த பக்தி உடைய இவர் தனக்கென ஓர் கலைப் பாரம்பரியத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வயலின் : திரு. பத்மநாதன் சியாம் கிருஷ்ணா**



மறைந்த வயலின் வித்வான் திரு.கி. பத்மநாதன் அவர்களுடைய சிரேஷ்ட புதல்வராகிய திரு பத்மநாதன் சியாம் கிருஷ்ணா புவியியல் துறையில் கலைமாணிப்பட்டம் பெற்றவர். மிருதங்க ஞான வாரிதி திரு சி.துரைராசா அவர்களிடம் மிருதங்க இசை பயின்று மிருதங்கம், வயலின் இரண்டிலுமே கலாவித்தகர் பட்டம் பெற்றவர். இதன் மூலம் வயலின் மிருதங்கம் மட்டுமின்றி கஞ்சிரா, தபேலா போன்ற தாள வாத்தியக் கருவிகளையும் சிறப்பாக இசைக்கக்கூடியவர். இவர் ஊர்காவற்துறை பிரதேச சபை அபிவிருத்தி உத்தியோகத்தகராக கடமை புரிகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடம் : திரு. கந்தசாமி நந்தகுமார்**



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திரு. கந்தசாமி நந்தகுமார் கலாபூஷணம் திரு.ம.சிதம்பர்நாதன் அவர்களிடம் மிருதங்கத்தைப் பயின்று கலாவித்தகர் பட்டம் பெற்றவர். மிருதங்கம் மட்டுமின்றி கடம், மோர்சிங், கஞ்சிரா போன்ற வாத்தியக் கருவிகளையும் இசை, நடன நிகழ்ச்சிகளில் இசைத்து தனக்கான ஓர் இடத்தைப் பெற்றுக்கொண்டவர்.



**தம்புரா : மயூரன் வாமணன்**

திரு.திருமதி.மயூரன் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனாகிய செல்வன் மயூரன் வாமணன் யாழ் சென் ஜோண்ஸ் கல்லூரியில் கல்வி கற்கின்றார். இவர் கலாவித்தகர் திரு.க.சிவகுமார் அவர்களிடம் மிருதங்கத்தை மிக விருப்புடன் பயின்று வருவதுடன் கடம், கஞ்சிரா போன்ற இசைக்கருவிகளை இசைப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணா வித்தகி இசையோடு சில தருணங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபேலா வித்தகன் இசையோடு சில தருணங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீணா வித்தகியின் குடும்பத்தினர்



## தபேலா வித்தகனின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனமார்ந்த நன்றிகள்

செல்வி தீக்ஷனா உமாகாந்தன் செல்வன் மயூரன் ஆரணன் ஆகிய எம் இரு குடும்பத்தினதும் கலைச்செல்வங்களின் வீணை மற்றும் தபேலா அரங்கப் பிரவேச நிகழ்விற்கு வருகை தந்து அரங்கை சிறப்பித்த அருளாளர்கள், சமயப் பெரியோர்கள்,கல்விமான்கள், அந்தண சிவாச்சாரியார்கள். உயர் அதிகாரிகள், கலைஞர்கள், கலா ரசிகர்கள், பெரியோர்கள், சுற்றத்தவர்கள், நண்பர்கள், மாணவச்செல்வங்கள் அனைவரிற்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நிகழ்விற்கு வருகை தந்து விழாவிற்குப் பெருமை சேர்த்த விழாத்தலைவர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் , அருளாசியும் வாழ்த்துக்களும் தெரிவித்த இரு கல்லூரி அதிபர்கள், சான்றோர்களையும் நன்றிப் பெருக்கோடு இதயத்தால் வணக்குகின்றோம்.

அரங்கேற்ற நிகழ்வு பரிபூரண தெய்வானுபத்தைத் தர வேண்டி இசையால் நிறைத்த அணி செய் கலைஞர்கள், அரங்க வடிவமைப்பாளர்கள், உடை அமைப்பாளர்கள், வீடியோ புகைப்படக்கலைஞர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், மண்டபத்தைத் தந்துதவியோர், அரங்கேற்ற முக்கிய அம்சங்களைத்தாங்கி வரும் அழைப்பிதழ், அரங்கேற்ற சிறப்பு மலர் என்பவற்றை அச்சிட்ட பதிப்பகத்தார்கள், பூமாலைகளைத் தொடுத்துத்தந்தவர்கள், உணவுப் பண்டங்களை ஆக்கித்தந்தவர்கள் என அனைத்தையும் முழுமைப்படுத்திய இனிய உறவுகள் அனைவரிற்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

இவ் அரங்கப்பிரவேச நிகழ்வானது தடைகள் பலவற்றையும் தாண்டி சிறப்புற அமையப் பல வழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள். இவையனைத்தையும் மனத்திடத்துடன் எதிர்கொண்டு செயற்படுத்தவும் எமக்குள்ளே தீர்க்கமற நிறைந்து வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவனை நன்றிப்பெருக்கோடு தாழ் பணிகின்றோம். தமிழர் தம் கலையும் பண்பாடும் செழுமையுற்று நிலைத்திருக்க எவ்விடர் ஏற்படினும் இவ்வையகம் இருக்கும் வரை எம் கடன் கலைப்பணி ஆற்றுவோமென உறுதி பூணுவோமாக!

திரு.திருமதி.உமாகாந்தன் குடும்பத்தினர்.
சோமரகம், 323/8D கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி.மயூரன் குடும்பத்தினர்.
51, இலந்தக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மதி கலர்ஸ், நல்லூர். 021 222 9285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org